உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-ச] விசுவாவசுஹு பங்குனிமீ [பகுதி-ரு

உள்ளுறை.

நன்னன் வேண்மான்.—பத்திராசிரியர் கஅரு
வாணன் கோவையுரை.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ககூரு
தொனி.—ஸ்ரீமத்-சி. கணேசையர் ககூசு
பிரதமவித்யாப்பியாசப்பிரகடனம்.—ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர் B. A. உ0க
கொழுத்துன்னூசியின் முடிவுரை:— } ஸ்ரீமத்-மு. சாம்பசிவநாயனார் உ0சு
கொழுவுந்துன்னூசியும்.—ஸ்ரீமத்-திரு. நாராயணையங்கார். உகக
வேளிர் வரலாற்றமறுப்பு.—ஸ்ரீமத்-மா. கார்த்திகேயமுதலியார் உகரு
நம்மாழ்வார்.—ஸ்ரீமத்-கோ. வெங்கோப ராவ் உஉஅ
திருக்கோவலூர் இராஜராஜன் சாஸனம்:— } ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராவ் M. A. உஙூ0
பெரியபுராண அரும்பத விளக்கம்:— } ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை உஙூசு
புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர்:— உச0
தொல்காப்பியஞ் செய்யுளியல் நச்சினார்க்கினியம்:— } ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார் க0சு

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

திருச்சிற்றம்பலம்.

நம் சங்கத்தின் ஐந்தாவது வருஷோற்சவம் அடுத்த மேமீ 24, 25, 26-தேதிகளில், வழக்கம் போலவே விமரிசையுடன் நடைபெறும். அவ்வருஷோற்சவ தினங்களில், சங்கவித்துவான்களிற் சிலர், அடியிற் குறித்தபடி, வியாசங்கள் வாசிக்கவும், நூல்கள் அரங்கேற்றவும் அன்புடன் சம்மதித்திருக்கிறார்கள்.

## [வியாசங்கள்.]

1. ஸ்ரீமத். பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், வக்கீல், மதுரை— "ஊக்கமுடைமை".

2. ஸ்ரீமத். ஐ. சாமிநாத முதலியாரவர்கள், "சூபர்வைஸர் ஆவ்பிரைமரிஸ்கூல்ஸ்" தஞ்சை—"முன்னாள்-இந்நாள்".

3. ஸ்ரீமத். நா. வேதாசலம் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், கிறிஸ்டியன் காலேஜ், சென்னை.—"பட்டினப்பாலை".

4. ஸ்ரீமத். S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A, ஸென்றல் காலேஜ், பங்களூர்.—"கடைவள்ளலார்காலம்."

## [அரங்கேற்றநூல்கள்]

5. ஸ்ரீமத். வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள், தமிழ்ப்பண்டிதர், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்—"ஸ்ரீ பட்டர்வைபவம்".

6. ஸ்ரீமத். S. பால்வண்ணமுதலியாரவர்கள், திருநெல்வேலி:— "சித்தாந்த ஞான ரத்னாவளி".

7. ஸ்ரீமத். டி. லக்ஷ்மண பிள்ளையவர்கள், B. A., ஹுஸூர் டிரஷரி ஆபீஸர், திருவனந்தபுரம்—"இரவிவர்மன்"—ஓர் நாடகம்.

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௪.] விசுவாவசு ௵ பங்குனி ௴ [பகுதி-௫.

## நன்னன் வேண்மான்.

நன்னன்வேண்மான் என்பவன், சங்கநாளிலே, தமிழகத்திற் பெருவள்ளலாய் விளங்கிய ஒரு சிற்றரசன். இவன் வேளிர்குலத்தைச் சேர்ந்தவனென்பது, இவனுக்கு வழங்கும் 'வேண்மான்[1]' 'வேள்[2]' என்னும் அடைகளால் விளங்குகின்றது. வேண்மான்[3]- வேளிர் தலைவன். சங்கநூல்களிலே, நன்னன் என்னும் பெயருடையாரிருவர் காணப்படுகின்றனர். இவரில் ஒருவன், பத்துப்பாட்டிலொன்றாகிய 'மலைபடுகடாம்' கொண்டவன். அப்பாட்டியற்றிய இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்க் கௌசிகனார், தாம்பாடிய வேண்மானை 'நன்னன்சேய் நன்னன்'[4] எனக்கூறுதலால், மற்றொருவனாகிய நன்னன், இவ்வேண்மானுடைய தந்தையென்று தெரிகின்றது. இவ்விருவருள் மகனாகிய நன்னனே புலவர் புகழ்ச்சிக்கு இலக்காய் விளங்கியவன். இவனை 'நன்னன் ஆய்' எனவும் வழங்குவர்.[5] பத்துப்பாட்டில் இவனுக்கு "பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள்"[6] என்னும் அடை குறிக்கப்பட்டிருத்தலால், இவன் நாடு பல்குன்றக்கோட்டமென்னும்பெயர்கொண்டது என்பதும், இ

---

1. அகநானூறு-௯௭. 2. மலைபடுகடாம்-அடி-௯௪.

3. 'தொண்டைமான்' 'சோமான்' என்பவற்றிற்போல 'மான்' விகுதி தலைமைச் சிறப்புணர்த்துவது; 'வெளியன்வேண்மான்' எனப் பதிற்றுப்பத்தினும் வருதல்காண்க. வேண்மான் என்பதன் பெண்பால் 'வேண்மாள்' என்பது; "இளங்கோவேண்மாள்' 'வேண்மாள் அந்துவஞ்செள்ளை" என முறையே சிலப்பதிகாரத்தும் பதிற்றுப்பத்தினும் வழங்குகின்றமை அறிக. 4. மலைபடுகடாம்-அடி-௬௪. 5. அகம்-௩௫௬.

6. பத்துப்பாட்டு. பக்-௩௭௨.

வன் தலைநகர் செங்கண்மா6b என்பதும் வெளியாகின்றன. இவன் மலைநாடு "ஏழிற்குன்றம்"7 எனவும் வழங்கும். அஃது ஏழுமலைப் பகுதிகளைப் பெற்றிருந்தமையால், இப்பெயர்கொண்டதாகத் தெரிகிறது. பல்குன்றக்கோட்டம் என்னும் பெயர்வந்ததன்காரணமும் இதுவேயாம். அவ்வேழு மலைகளில் பாழிச்சிலம்பு,[8] நவிரம்[9] என்னுமிரண்டே இப்போது தெரிவன. நன்னனாட்டில், பாழி[10], வியலூர்[11], பாரம்[12], பிரம்பு[13]—என்ற ஊர்களும், சேயாறு[14] என்னும் நதியும் இருந்தனவென்பது முன்னூல்களால் அறியப்படுகிறது. இவனாண்ட பல்குன்றக்கோட்டநாடு, இப்போது வடஆர்க்காடு தென்னார்க்காடு ஜில்லாக்களில் அடங்கியுள்ளதென்பர்.[15] நன்னனது நவிரமென்னும் மலைமேல் "காரியுண்டிக்கடவுள்" என்னும் சிவபிரான் கோயிலொன்றுண்டு.[16] அகநானூற்றில் "பாடுநர்செலினே, அருங்கலம் பெறிந்த பெருங்கல வெறுக்கை, சூழாது சுரக்குநன்னன்" (நஉசக) "இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்,பாரத்துத் தலைவனாநன்னன்" (கரு௨) என இவன் புகழப்படுதலோடு, மலைபடுகடாத்தில் அடியில்வருமாறு சிறப்பிக்கப்படுகின்றான்.

"மின்னவி றடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு
தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவ ரருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்குமவ னீகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கு மாற்றலும் புகழுநர்க்
கரசுமுழுது கொடுப்பினு மமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ னண்மகி ழிருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவி லவையத்து

6b இப்பெயரே இன்றும் வழங்குகிறது. பிற்காலத்து, ஆங்கிலேயர்க்கும் ஐதராலிக்கும் போர்நிகழ்ந்த களமாகிய செங்கண்மா இதுவே.

7. அகம்-கரு௨, நஉருக. 8. அகம்-கரு௨. 9. மலைபடுகடாம்-ருஎக.

10, 11, 12, 13-அகநானூறு. 14. மலைபடுகடாம்-சஎச.

15. புறநானூற்றுப் பதிப்பினிறுதியிலுள்ள ஸ்ரீவெங்கையரவர்கள் குறிப்பிற்காண்க. 16. மலைபடுகடாம்.அரு.

வல்லா ரயினும்புற மறைத்துச்சென் றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதி னியக்குமவன் சுற்றத் தொழுக்கமும்
பாயிரு ணீங்கப் பகல்செய்யா வெழுதரும்
ஞாயி றன்னவவன் வசையில் சிறப்புங்
கேளினி வேளைநீ முன்னிய திசையே.''

மதுரைக் காஞ்சியில், மதுரையினிகழும் பலவகையான உவகையாரவாரத்தைப்பற்றிச் சொல்லும்போது, மாங்குடி மருதனார் என்னும் பழைய புலவர், "பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட், சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு" (அடி-௬௧௦, ௬௧௧) என்று உவமிக்கின்றார். இதனால், செங்கண்மாவில் நன்னன்வேண்மானது பிறந்த நாட்கொண்டாட்டம், தமிழகமுழுதும் புகழத்தக்க விமரிசையுடன் நடைபெறுவதென்பது விளங்கும். இக்கொண்டாட்டதினம், 'நன்னனாள்' என்றபெயர் பெற்றது என்று நச்சினார்க்கினியர் கூறுவர்.[17] இந்நன்னன் சேரமானதுபடைத்தலைமைவகிக்கும் கௌரவமும் பெற்றிருந்தான்.[18] இவனுக்கு "வானவிறல்வேள்"[18b] என்னும்சிறப்பு மலைபடுகடாத்தில் (அ-௧௬௫) கூறப்பட்டுள்ளது. இத்தொடர்மொழியே மதுரைக்காஞ்சியில் அழும்பில்வேள் என்பானுக்கும்வழங்குகிறது.[19] இவ்வேளும் சேரமானது கருமத்தலைவரிலொருவன்[20]. இவ்வாறு சேரரது அரசியலிற் றலைமைவகித்த சிலர்க்கு "வானவிறல்வேள்" என்னும் சிறப்படை வழங்குதலை நோக்கும்போது, அது 'வானவனுக்குரிய, வெற்றிபொருந்திய வேள்' அல்லது "வானவனது வெற்றிக்கு ஏதுவாகிய வேள்" என்னும் பொருளில் வந்த தொடராகவேண்டுமென்று கருத இடந்தருகின்றது. (வானவன் - சேரன்) இவ்வாறானால் "வானவன் விறல்வேள்" என்பது 'வானவிறல்வேல்' எனத்திரிந்ததாகல்வேண்டும். இந்நன்னன்வேண்மான் பிண்டன் என்பானோடு பொருது வெற்றிபெற்றவனென்று சொல்லப்பட்டுள்ளான்.[21]

17. பத்துப்பாட்டு, பக்-௨௨௫. 18. ௬௬-ஆம் அகப்பாட்டுரை.
18b இது 'மானவிறல்வேள்' என்று திரிந்துள்ளது.
19. மதுரைக்காஞ்சி-அடி-௩௪௪, ௩௪௫.
20. சிலப்பதிகாரம், காதை-௨அ, அடி-௨௦௫. 21. அகம்-௧௫௨.

இனி, நன்னன்வேண்மானுடைய தந்தையாகிய நன்னன், கொடுங்கோலனென்றும், கல்வியருமையறியாதவனென்றும், அதுபற்றிப் புலவரை வெறுத்தவனென்றும் தெரிகின்றன. இவனது கொடுங்கோலைக்குறித்து ஒரு கதை, பரணர் என்னும் பழையபுலவராற் குறிக்கப்பட்டுள்ளது. இந்நன்னனது சோலையிலே அவன்தின்று மகிழ்தற்கென்றே வைத்துவளர்க்கப்பட்ட ஒருமரத்தின் இனியகாயொன்று, அச்சோலைப்பக்கத்தே ஓடும் ஆற்றில் விழ்ந்து அயலதாகிய துறையில் ஒதுங்க, அவ்விடத்தே குளித்தற்பொருட்டுச் சென்ற பெண்ணொருத்தி, அவ்வொதுங்கிய காயை அறியாது எடுத்துத்தின்றாள். இச்செய்தியைச் சோலைகாவலரால் அறிந்த நன்னன் பெருஞ்சினங்கொண்டவனாய், தான்தின்றற்குரிய காயை அப்பெண் தின்றதன்பொருட்டு, அவளைக் கொலைபுரிந்துவிடும்படி கட்டளையிட்டனன். அப்பெண்ணின் தந்தையோ, தன்செல்வமகளுக்கு நேர்ந்த விபத்தை யெண்ணிக்கலங்கி, நன்னனிடஞ்சென்று ‘ அரசே! என்மகள், தமக்குரியகாய் என அறிந்துவைத்து அதனைத் தின்றவளல்லள். அறியாது செய்ததைப் பொறுத்தருள்க ; அவள்புரிந்த இத்தவற்றுக்காக எண்பத்தொரு யானைகளையும், அவள்நிறையளவு பொன்னாற்செய்த பாவையையும் யான் ஈடுதரவல்லேன். அவட்கு விதித்த கொலைக்குற்றத்தை மட்டும் நீக்கியருள்க ” என்று பலவாறு மன்றாடினன். எவ்வளவு மன்றாடியும், அறத்தைநோக்கானாய், உள்ளிரஞ்சிறிதுமில்லானாய், அக்கொடுங்கோல்நன்னன் அப்பெண்ணைக் கொலைபுரிந்தே தன்சினந்தீர்ந்தனன் ” என்பது. இதனை,

“ மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ வன்னை
ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.”

எனக் குறுந்தொகையில் வரும் பரணர்பாடலான் (உகூஉ) அறிக. நன்னனுடைய அறிவீனத்தையுங் கொடுங்கோலையுங் குறித்தற்கு,

சங்கநாளிலே வழங்கிய இக்கதையே சான்றும். "பண்டும்பண்டும் பாடுநருவப்ப" என்னும்புறப்பாட்டில், அதனுரைகாரரும் இக்கதையைக் குறிப்பித்திருக்கின்றனர். "அறிவார்யார் நல்லாள் பிறக்குங் குடி" என்றவாறு, இக்கொடியோனுக்கு, நற்குணமே திரண்ட நன்னன்வேண்மான் பிறந்தனன். பண்டைக்கால வழக்கப்படி, தந்தை பெயரையும் உடனிணைத்து "நன்னன்சேய்நன்னன்" என்று இவ்வேண்மானை முன்னோர் வழங்கினராயினும், அத்தீய தந்தையை விலக்காது பிணைத்தது, "கள்ளிவயிற்றி னகில்பிறக்கும்" என்னு முதுமொழியை மெய்ப்பித்தற்குப் போலும்! உலகத்தார்கூறும் பழிச்சொல்லுக்கிலக்காய்நின்ற நன்னன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலென்னும்வேந்தனால், தன்னூர்ப்புறத்தேபோரிற்கொல்லப்பட்டு[22] ஒழிந்தபின், அவன் மகனாகிய நன்னன்வேண்மான் பல்குன்றக்கோட்டத்தைத் தன் செங்கோலால் மகிழ்வித்தான். தன்றந்தை சேரனுடன் பகைத்திறந்தனனாயினும், நன்னன்வேண்மான் அவனுடன் நட்புக்கொண்டிருந்ததோடு, முற்கூறியவாறு,[18] அச்சேரன்படைத்தலைவனும் ஆயினன். (இவன்றந்தையே சேரன்படைத்தலைவனெனின், அவன் தன் எஜமானனுடன் போர்புரிந்தானென்றல் பொருந்தாமை காண்க). நன்னன்சேய் நன்னன் பெருவள்ளலாய்ப் புலவர்புகழ்ச்சிக்குரியவனாக விளங்கினும், இவன் தந்தை புரிந்த தீச்செய்கைகளே, இவன் நற்செய்கைகள் பிற்காலத்து மறைத்துவிட்டனவாகக் காணவில்லை. தந்தையாகிய நன்னன், பெண்கொலை புரிந்த பழிமட்டும் உடையனல்லன். அவன் கல்வியருமையறியாத கசடனுமாதலால் தன்பாற்பரிசில்வேண்டிவரும் நல்லிசைப்புலவரையெல்லாம் வெறுத்து, அவர்வாராமல் தன்வாயிற்கதவடைத்துவந்தான். இஃது, அக்காலத்துப் புலவர்களுக்கெல்லாம் பெருத்தகோப மூட்டியதோடு, அவன்மேல் வசைபாடவும் அவர்களைத்தூண்டிற்று. நல்லிசைப் புலவராகிய ஔவையார், ஒருகால், பல்குன்றக்கோட்டம் என்ற ஏழிற்குன்றஞ் சென்றிருந்தபோது, இந்நன்னன் அவரது அருமைபெருமைகளை அறியாது உதாசீனனாயிருக்க, அதனைப் பொறுக்காத அம்மெல்லியற்புலவர்,

22. பதிற்றுப்பத்து-நான்காம்பத்துப்பதிகம்; பாட்டு-அஅ.

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்——மருடேயும்[23]
பாட்டு முறையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள."

என அவனை முனிந்துபாடினர்.[24] (மகனாகிய நன்னன் புலவர்புகழ்ச்சிக்குரியவனாகலின், இப்பாட்டில் "ஏழிலார்கோவே" என்பது தந்தையாகியநன்னனைக்குறிக்கும்: அவனே ஔவையார்காலத்துக்கேற்றவனும் தீச்செயலுடையவனுமாதலால்). தொல்காப்பியச் செய்யுளியலுரையில் குறிப்பில்லாமலும், தமிழ்நாவலர் சரிதையில் "ஔவையார் ஒருவனைப்பாடி, அவனிகழ்ச்சி சொல்ல, அப்போதுபாடிய அங்கதம்" என்னும் குறிப்பிட்டும் ஓர் அகவல் காணப்படுவது அடியில் வருமாறு:—

"எம்மிக ழாதவர் தம்மிக ழாரே
எம்மிசழ் வோரே தம்மிகழ் வோரே
எம்புக ழிகழ்வோர் தம்புக ழிகழ்வோர்
பாரி யோரி நள்ளி யெழினி
ஆஅய் பேகன் பெருந்தோண் மலையனென்
றெழுவரு ளொருவனு மல்லை யதனால்
நின்னை நோவ தெவனோ [புலவா
தட்டார்க் குதவாக்] கட்டி போல
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யானு முளனே தீம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுகுத் தேனே."

இப்பாட்டும், ("எழுவருளொருவனுமல்லை" என்பதனால் தமிழ்வள்ளலெழுவரில் ஒருவனாகாத) நன்னனையே ஔவையார்பாடியது போலும்! பிற்காலத்திலும் புலவர்கள், இத்தீய நன்னன்செய்கைகளை மறந்தவரல்லரென்பதை அடியில் வரும் வரலாறு காட்டத்தக்கது. ஒருநாள் இளங்கண்டீரக்கோ என்பானும், நன்னன்வழியில் வந்த

---

23. 'மருடீர்ந்த' எனவும் பாடம்.

24. தொல், பொருளதிகாரம், பக்-சுஅ௭; தமிழ்நாவலர் சரிதை.

[ ] இதனுள் அடங்கிய எழுத்துக்கள், பிரதிகளிற் பலபடியாகவேறுபட்டிருப்பினும் அவற்றை உற்றுநோக்கி ஒருவாறு அமைக்கப்பட்டது; ஆயினும், உண்மைப்பாடம் இன்னதென்று துணியக்கூடவில்லை.

இளவச்சிரக்கோ என்பானும் ஓரிடத்துச் சேர்ந்திருந்தபோது, அங்கேசென்ற பெருந்தலைச்சாத்தனார் என்னும் நல்லிசைப்புலவர், முன்னவனைத் தழுவி மரியாதைசெய்து, பின்னவனாகிய இளவச்சிரக்கோவை அவ்வாறு செய்யாதொழிய, அஃதுணர்ந்து இளவச்சிரக்கோ "என்னை நீர் புல்லாமைக்குக் காரணமென்ன" என்று புலவரைக்கேட்பவும், அவர் "இவன்—பெண்டிருந் தம்தாரத்தினின்று பரிசிலர்க்கு யானைக்கொடையளிக்கும் கண்டீரக்கோன்: ஆதலால் அவனைத் தழுவினேன்; நீயும்—நன்னன்மரபிலுதித்த பெருமையுடைமையோடு இயற்கையின் நற்குணங்களுடையவனாதலால் தழுவற்குரியவனேயாயினும், நின் முன்னோனொருவன் பரிசில்வேண்டிச் சென்ற புலவர்க்கு வாயிற்கதவடைத்தமைபற்றி, நும்மலையை எம்மவர்பாடுதல் தவிர்ந்தார்" என்றனர். இதனை,

"பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாதலி னன்று
முயங்க லான்றிசின் யானே; பொலந்தேர்
நன்னன் மருக னன்றியும் நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே: வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னாடுமழை
யணங்குசா லடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே."

எனவரும் புறப்பாட்டடிகளால் உணர்க. இவற்றுள்ளே கூறப்பட்ட நன்னன் என்பவன் நற்குணமிக்க நன்னன்வேண்மானேயாவனென்பதும், புலவர்க்குக் கதவடைத்தவன் தீக்குணமிக்க அவன் தந்தையாகிய நன்னனாதல்வேண்டுமென்பதும் உய்த்துணரப்படுவன. இவ்விருவர்வழியில் இளவச்சிரக்கோ என்னும் இளைஞன் உதித்தவனென்று இப்பாட்டின் குறிப்பால் விளங்குகிறது.

இனி, நச்சினார்க்கினியர் மலைபடுகடாத்துவரும் "தீயினன்ன வொண்செங் காந்தள்" என்பதன் விசேடவுரையிலே "இதற்கு, நன்னனென்னும் பெயர் தீயோடடுத்தமையின் ஆனந்தமாய்ப், பாடினாரும் பாட்டுண்டாரும் இறந்தார் என்று ஆளவந்தபிள்ளையாசிரியர் குற்றங்கூறினாராலெனின்—அவர் அறியாது கூறினார்" என்று தொடங்

கிப், பிறரொருவர் கூற்றை மறுக்கின்றார். "தீயினன்ன" என்ற தொடரில் ஆனந்தக்குற்றமில்லையென்பது அவ்வுரையாளர்மறுப்பாயினும், நன்னனும் அவனைப்பாடிய கௌசிகனாரும் ஒருங்கிறந்தவர்என்றபிறர்கூற்றை அவர் மறுத்திலராதலால், அவ்விருவரும் ஏதோ ஒரு காரணத்தால் ஒருகாலத்துயிர்விட்டவரென்று அறியப்படுகிறது.

இனி, நன்னனது குலவரலாற்றைக் குறித்துச் சிறிது ஆராயப்படும். இவன் வேளிர்மரபைச் சேர்ந்தவனென்று மேலே கூறப்பட்டது. வேளிர் எனப்பட்டவர் பண்டைச் சளுக்கியரே என, முன்பு என் வியாசங்களிற் குறித்துள்ளேன். ஆனால், இந்நன்னன் குலத்தைச், சளுக்கியர் மரபென்பதினும் அவரது சகோதரவகுப்பினராகிய கடம்பர்மரபென்றல் பொருத்தமாகத் தெரிகிறது. ஆதிசரித்திரத்தை நோக்குமிடத்து சளுக்கரும் கடம்பரும் குலத்தில் வேறுபட்டவரல்லர். தம்மைப்பிறப்பித்த முனிவரிடத்திலிருந்து பெற்ற "ஆரீதிபுத்திரர்" என்னும் பெயரும், மானவ்யகோத்திரமும், முருகக்கடவுளைத் தங்குலதெய்வமாகக் கொண்டமையும் சளுக்கியர்க்கும் கடம்பர்க்கும் வித்தியாசமின்றியே காணப்படுகின்றன. இவருள் கடம்பரென்பவர், தம்மிருக்கைக்குப்பக்கத்தே, (தங்குல தெய்வமாகிய முருகக்கடவுட்குரிய) கடம்பமரத்தை வளர்த்து அதனைப் பெரிதும் போற்றிவந்ததனால் அப்பெயர் பெறலாயினர். 25 இவ்வாறுகடம்பைப்போற்றிய வேளிர் வகுப்பார், சங்ககாலத்தில், மேற்கூறிய நன்னன் வழியினராகவே காணப்படுகின்றார். பதிற்றுப்பத்தின் நான்காம்பதிகத்தில் 'உருள்பூங்கடம்பின் பெருவாயினன்னன்' என்றுகூறப்பட்டுள்ளது. இதன் பொருள்:—'உருண்டபூவையுடையகடம்பைத் தனதுபெரியவாயிற்கண்ணே கொண்ட நன்னன்' என்பதாம். பதிற்றுப்பத்துரைகாரர் 'கடம்பின்பெருவாயில்—நன்னன் ஊர்' என்பர்; இப்பெயரும் யான்கூறிய காரணத்தால்வந்ததேஎன்புதை உய்த்துணர்க. நன்னனுக்கு வாகை26 காவன்மரமென்றுஅப்பதிகத்தில் வேறுகூறப்படுதலால், இக்கடம்பு, அவன் குலத்தினர்கொண்ட அடையாளமரமாகும். இவற்றால், நன்னன், வேளிருள்ளே கடம்

25. Bombay Gazetteer, Vol. I, Part. II, page. 286.

26. பதிற்றுப்பத்து-பக்-ருஅ.

பார்ப்பிரிவைச் சேர்ந்தவனென்று தெரிகிறது. இனி, பிற்காலத்துக் கடம்பர்க்கும் வேளிர் என்னும் சொல்வழக்கம் இருந்ததென்பதற்கு, நீண்டகாலம் இவராண்ட பிரதேசமொன்று இவர் பெயரால் "வேள் கிராமம்" என வழங்கியதே சான்றாம் 27. இப்பிரதேசம், இப்போது "பேல்காம்" (Belgaum) என்றுதிரிந்து, பம்பாய் இராஜதானியில் ஒரு ஜில்லாவாக வுள்ளது 28.

இனி வேளிராகிய சளுக்கியர் மகதநாட்டு ஆந்திரரினின்று பிரிந்தவரென்பதற்குரிய காரணங்கள் "ஆய் அண்டிரன்" என்னும் வியாசத்தே காட்டப்பட்டன. எனவே, அச்சளுக்கரது சகோதர வருப்பினராகிய கடம்பவேளிரும் அவ்வாந்திரரே யென்பது தானே பெறப்படும். இற்றைக்கு 1700-வருஷத்துக்கு முன்பு, கடம்பர் மரபைச் சேர்ந்த "ஆரிதி புத்திர சாதகர்ணி" என்னும்வேந்தனொருவன் தக்ஷிணத்தில்இருந்தனனென்பது பழையசாஸனமொன்றால் தெரிகிறது. இவ்வரசன்பெயரின் முற்பகுதி அவனதியற்பெயரென்றும், பிற்பகுதியாகிய சாதகர்ணி என்பது அவன் குலத்தைக்குறிப்பதென்றும், ஆகவே, அக்கடம்ப வேந்தன் ஆந்திரரோடு தொடர்புடையனாதல் வேண்டுமென்றும் தக்க காரணங்களுடன் சரித்திரவறிஞர் கருதியிருக்கின்றனர் 29. (சாதகர்ணி-மகதநாடாண்ட ஆந்திரபிருத்திய அரசர் சிலர்க்கு வழங்கிய பெயர்) எனவே, சளுக்கியரைப்போலவே கடம்பரும் ஆதியில் ஆந்திரரினின்றுபிரிந்தவர் என்னுங் கொள்கை வலியுறுவது விளங்கும்.

நன்னன்குலத்தவர், மேற்குறித்தவாறு ஆந்திரவமிசத்தவரே யென்பதற்கு, வேறுசில சான்றுகளும் காட்டலாம். நன்னன்வழி

---

27. பம்பாய் இராஜதானியில், வேள் என்ற சொல்லடியாகப்பிறந்த வேளூரகம், வேளாபுரம், வேள்பள்ளி, வெள்சுழி, வேள்வலம்—முதலாய பல நகரங்கள் உள்ளன. இந்நகரங்களெல்லாம் பழைமைபெற்றவை. பழைய தமிழ் நிகண்டுகளில், பம்பாய்ப்பிரதேசம் "வேள்புலம்" என்று குறிக்கப்பட்டிருத்தலோடு, இந்நகரங்களின் பெயரும் ஒத்துள்ளமை கருதற்குரியது. சளுக்கியரும், கடம்பரும் ஆங்கு ஆட்சிபுரிந்த காலத்தே, "வேள்" என்ற பெயர் அவர்க்கு ஆண்டும்பெருவழக்காக வழங்கப்பட்டுவந்ததென்பதற்கு இவை தக்க சான்றுகளாகின்றன.

28. Bombay Gazetteer, Vol. I, Part. II, pp. 568—570.

29. Ibid-pp. 278, 279.

*

யில் வந்த இளைஞனொருவன் "இளவச்சிரக்கோ" என்னும் பெயருடையானென்பது, புறநானூற்றால் அறியப்படும். இளவச்சிரக்கோ என்பது இளவிச்சிக்கோ எனத்திரிந்தும் வழங்கப்பெறும். இவ்விளைஞன்பெயர்கொண்டு, இவன்முன்னோர் "வச்சிரக்கோ" அல்லது "விச்சிக்கோ" என்றழைக்கப்பட்டனர் என்பது பெறலாகின்றது. இவ்வாறே, நன்னன்வழியினனொருவனை "வில்கெழு தானை விச்சியர் பெருமகன்" எனக்குறுந்தொகையிற் (௩௨௮) கூறப்படுதல் காண்க. "வச்சிரக்கோ" என்பதற்கு வச்சிரநாட்டரசன் என்பது பொருள். வச்சிரநாடு என்பதொன்று தமிழகத்து அக்காலத்து இருந்ததென்று முன்னூல்களால் விளங்கவில்லை. ஆதலால், இப்பெயர் நன்னன்வழியினர்க்கு அவராதிதேசத்தைப்பற்றியே வந்ததாதல் வேண்டுமென்பது பெறப்படும். "மாநீர்வேலி வச்சிரநன்னாட்டுக், கோன்" என்னும் சிலப்பதிகாரவடியின் விசேடவுரையிலே, அடியார்க்குநல்லார், வச்சிரநாடு - சோணைநதிக்[30]கரையிலுள்ள பிரதேசம் என்று குறிப்பிடுகின்றார் (பக்-௧௩௯). அஃதாவது ஆந்திரசக்கரவர்த்திகள் ஆட்சிபுரிந்த மகததேசத்தின் தென்பகுதியாம். சரித்திரநூல்களில் "வச்சிரதேசம்" எனத் தனித்து வழங்கப்படாமையால், அது, முற்காலத்தே மகதநாட்டின் பிரிவுகளில் ஒன்றாயடங்கியிருந்ததென்று தெரிகிறது. இவ்வாறு, நன்னன்வழியினர் ஆந்திரகுலத்தவரென்பதற்கு முன்புகூறிவந்த காரணங்களோடு பொருந்த, அவ்வாந்திரரது வச்சிரநாட்டை நன்னன்குலத்தவர்க்குங் கூறியிருத்தல் இங்கே சிந்திக்கத்தக்கது. நன்னனது பல்குன்றக்கோட்டத்துக்கே "வச்சிரநாடு" அல்லது "விச்சிநாடு" என்னும் பெயருமுண்டென்று பின்னோராட்சியால் விளங்கினும், அதுவும், அவன்முன்னோரது குலதேசம்பற்றியே வழங்கியதாதல்வேண்டுமென்று கருதப்படும். அன்றியும், நன்னனோடு இருக்கப்பட்ட நடுநாட்டுக்கு "மகதநாடு" என்னும் பெயர் முன்னாளில் வழங்கிவந்ததென்பது சாஸனங்களால் அறிந்தது.[31] இதுவும், நன்னன்குலத்தோர் தம்பூர்வதேசத்தை அ

30. இச்சோணைநதியின் வரலாறு வான்மீகத்திற் காணப்படும். இது வடக்கே 'பண்டில்கண்டு' என்னும் நகரத்தையடுத்து உற்பத்தியாகி, பாடலீபுரத்தருகே கங்கையிற் சங்கமமாகும் ஓர் உபநதியாம்.

31. செந்தமிழ்த் தொகுதி-௩, பக்-௪௨௪.

பிமாணித்து வழங்கியதேயாம். இனி, வேளிர்குலத்துப் பிறந்தவளும் சேரன் செங்குட்டுவன் மனைவியுமாகிய வேண்மாளுக்குச் 'சோணை' என்பது பெயரென்று சிலப்பதிகாரங் கூறுகின்றது. இப்பெயர் மகதநாட்டிற் பாயும் நதிக்குரியதென்பது முன்னர் விளக்கப்பட்டது. இந்நதியின்பெயரை வேளிர் தம்மகட்கு இட்டுவந்ததைநோக்குமிடத்தும், அவ்வேளிர்க்குத் தம்பூர்வதேசத்திலிருந்த அன்புவிளங்கும். சுருங்கச்சொல்லின், "வேளிர்" என்று தமிழ்நூல்களிற் கூறப்பட்டோர், மிகப்பழைய காலத்தே, மகதநாடாண்ட ஆந்திரரினின்று பிரிந்து தென்னாடாண்ட ஒரு சிற்றரசர் என்பதே முடிபென்னும்படி பழையநூல்களும் பிறவும் குறிப்பிக்கின்றன.

பத்திராசிரியர்.

[இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத அகநானூற்றுக்குறிப்புகள், "செந்தமிழ்"ப் பத்திராசிரியராய் இப்போது விடுதிபெற்றிருப்பவர்களும், என்னுடைய அரும்பெறன்மைத்துனருமான, ஸேதுஸம்ஸ்தான வித்துவான் ஸ்ரீ. உ. வே: ரா-இராகவையங்காரவர்களால் அன்புடன் உதவப்பெற்றவை. ப—ர்.]

---

உ

# வாணன்கோவை யுரை

வாணன் கோவைக்குச் சொக்கப்பநாவலராற் செய்யப்பட்டவுரையிலே சில பாகங்களிலே சில ஆக்ஷேபங்கள் தோன்றுகின்றன. அவைகளுள்ளேசில செந்தமிழ்கற்பார்கட்குப் பிரயோசனமாக இங்கே எழுதப்படுகின்றன.

கசு-ம் கவி.

கறையா ரிலங்கிலை வேலன்பர் காயக் கடற்கெதிர்ந்த
நிறையாம் வரம்பினி நிற்பதன் றூனிறை நீருலகை
மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்றென் மாறையினும்
பொறையார் தவஞ்செய் திலேநெஞ்ச மேயென் புகல்வதுவே.

இக்கவியிலே "இலங்கிலைவேலன்பர்" என்பதற்கு "இலைபோலும் வேலையுடைய அன்பர்" என்றார். சிந்தாமணியுரையிலே "இலைவேல்" என்புழியெல்லாம் நச்சினார்க்கினியர் "இலைத்தொழிலமைந்தவேல்" என்பர். இவற்றுள்ளே கொள்ளத்தக்கது யாது? "நிறை-மறை; பிறராறியாமை. நிறையெனப்படுவது மறை; பிறராறியாமையென்றார் பிறரும்" என்று நிறை என்பதற்கு விசேடமும் எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பிரித்துணர்தலும் பொருந்துமா? "நிறையெனப்படுவது மறை பிறராறியாமை" என்பது கலித்தொகை. (நெய்தல்-கரு). பரிசோதகரால் வந்தது போலும்.

## கக௯-ம் கவி.

திரண்மா மரகதச் செய்குன்று காவொன்றுஞ் செவ்வனநீர்
முரண்மா தவங்கள் முயன்றுசெய் தாலு முளரிமங்கை
சரண்மாறை வாணன் றமிழ்த்தஞ்சை நாட்டென் றனியுயிர்க்கோர்
அரண்மா னனையகண் ணாள்கொங்கை போற லரிதுமக்கே.

இக்கவியிலே 'என்றனியுயிர்க்கோ ரரண்மானனையகண்ணாள்' என்பதற்கு "எனதுயிர்க்கு அரணும் மானும் அனைய கண்ணாள்" என்றுரை கூறி "அரண்மான் என்புழி உம்மைத் தொகை" என விசேடமுங் கூறினார். கண்ணுக்கு அரணையும் உவமானமாக மானோடுசேர்த்துத் தொகைப்படுத்தல் இங்கே இயையுமா?

## கஉ-ம் கவி.

முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீர்
அகத்திற் பிறந்த வாவிந்த மோவடை யார்தமக்கு
மகத்திற் சனியன்ன சந்திர வாணன்றன் மாறைவெற்போ
நுகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே.

இங்கே "நுகத்திற் பகலனையாய்" என்பதற்கு "நுகத்தின் நடுப்போன்ற தலைவனே" என்றார். இங்கே பகலென்றது நடுவினையா? நுகத்தின் மத்தியிலுள்ள ஆணியையா? வெண்பா மாலையிலே "பகலன்னவாய்மொழி" என்புழியும், ஞானமிர்தத்திலே "பால்கோடாது பகலிற்றோன்றல்" என்புழியும், இரகுவமிசத்திலே "நுகப்பகற்றலைக்கொளீஇ" என்புழியும் மத்தியாணி என்றே பொருள் கொள்ளப்பட்டது.

## ககரு-ம் கவி.

ஒலிதென் கடல்புடை சூழுல கேழினு மூழ்வினை தான்
வலிதென் பதனை வயக்கிய தாற்றஞ்சை வாணன்வெற்பா
கலிதெங்கு மாவுங் கமுகும் பலாவுங் கதலிகளும்
பொலிதென் பொதியிலின் மேற்சந்த னூடவிப் பூந்தழையே.

இக்கவியிலே "கலி - இலாங்கலி; தலைக்குறையாய் விகாரப்பட்டுநின்றது; தெங்கில் ஓர் வேறுபாடு" என்றார். இலாங்கலி என்னும் வடசொல் கலி எனக் குறைந்து நிற்றற் பாலதோ? வேறுபாடு என்பதற்குப் பிரமாணம் யாது? கலி தெங்கு என்பதை வினைத்தொகையாக்கிக் கலித்ததெங்கு என்றுரைத்தல் நன்று போலும். நெடுநல்வாடையிலே "கலித்த நெல்" என்புழி நச்சினார்க்கினியர் "மிக்கெழுந்த நெல்" என்றார்.

## கஉ௫-ம் கவி.

விடையான் மிசைவரு மேருவில் லானொடு மேழிவென்றிப்
படையா னொடும்வெம் பகைகொள்வ தோபகல் போலுமெய்ம்மை
உடையா னுயர்தஞ்சை வாணனொன் னாரென வொல்கியநுண்
ணிடையாய் பிறிதுகொ லோவறி யேன்வெற்ப ரெண்ணுவதே.

இக்கவியிலே "பகல்போலு மெய்ம்மையுடையான்" என்பதற்கு "நடுவுநிலைமையையும் வாய்மையையுமுடையான்" என்றுரை கூறி "பகல் - நடுவு நிலைமை. போலும் - அசை நிலை" யென விசேடமுங் கூறினார். "திங்களொடு ஞாயிறன்ன வாய்மையும்" என்பதுபோலக்கொண்டு "பகல்போலும்" என்பதற்குச் சூரியன் போலும் எனக் கூறலாகாதோ? அதுவே தக்கது: என்பாருமுளர்,

## கசக-ம் கவி.

மஞ்சூட்டி யன்ன சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பிற்
பஞ்சூட் டியமென் புதயுகத் திருங்கள் பாடியின்மான்
வெஞ்சூட் டிழூதன்ன வூனும்பைந் தேனும் விருந்தினர்க்குச்
செஞ்சூட் டிளகுபொன் போற்றினை மூரலுந் தெள்ளமுதே.

இக்கவியிலே "மஞ்சூட்டியசுதைமதில்" என்பதற்கு "முகிலையருந்தியது போன்ற சுதைபூசிய மதில்" என்றார். இங்கே கொள்ளக்கிடக்கும் ஆசிரியர்கருத்து யாது? ஊட்டுதல், அருந்துதலா? அருந்துவித்தலா?

௩௨௩-ம் கவி.

செயலைத் தருவின் வருநிழ லேபெருஞ் சிற்றில்லமே
வயலைக் கொடிநொச்சி மண்டப மேதஞ்சை வாணனென்னோர்
இயலைத் தனித்தனி தந்தன ளேநமக் கின்றிதன்றோ
கயலைப் பொருதகண் ணாண்மேலும் வாழ்விக்குங் கட்டளையே.

இக்கவியிலே "வயலைக்கொடிநொச்சிமண்டபமே" என்பதற்கு "வெளியிலே செய்த கொடிகட்டிய மதில் சேர்ந்த மண்டபமே" என்றார். இங்கே பயிலிடத்துள்ள இலதாமண்டபம் என்பது போதர வயலைக்கொடியாகிய நொச்சியையுடைய மண்டபம் என்றுரைத்தலன்றி இதுவும்பொருந்துமா? வயலை—ஒருவகைக்கொடி.

யாழ்ப்பாணத்துச்சுன்னாகம்
விசுவாவசு௵ பங்குனிமீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

# தொனி.

அஃதாவது கவிதான் எடுத்துக்கொண்ட செய்யுட் பொருளாகிய புகழ்பொருளையன்றி, சொல்லாற்றலாற் பிறிதுமொருபொருள் தோன்ற வைப்பது. இது செய்யுட்கு மிக்க அலங்காரத்தைக்கொடுப்பதாகும். அதுபற்றியே இதனைக் கவிஞர்பலர் தாமியற்றிய நூல்களுள் ஆங்காங்கு அமைந்துப்பாடியிருக்கின்றனர். அவற்றுட்சில வற்றை இங்கே காட்டுதும்.

இரகுவம்சத்து,

உதயமா லவிரி யெண்ணி லுதித்தன வொளியிற் றூய
சிதைவிலா நல்லைச் செக்கர்ச் செவ்வந்தி மெய்யார் தந்த
புதைகொண்மா மதத்த வாய்ப லானனப் புனிதப் பொற்றே
னிதயவா ரிசத்த தாறு லெக்கலை மணவா தெற்கே.

என்னும் க-ம் செய்யுள் இத்தொனியுடையதாய் வந்தது. இதில் உதயஞாயிறு அளவிறந்தன உதித்தாற் போன்ற ஒளியையுடைத் தூயசெவ்வானம்போன்ற மேனியையுடையராகிய சிவனீன்றருளி யயானைமுகத்தையுடையதேன் என் இருதயகமலத்தின் கண்ணதா

யின் எக்கலைகடாம் எனக்குத்தோன்றப்பெறு என்னும் பொருளே யன்றி, அலரிப்பூக்கள் அளவிறந்தன பூத்தாற்போன்ற ஒளியை யுடைத்தாய செவ்வந்திப்பூப்பூக்க ஆம்பற்பூவிலுள்ளதேன் தாம ரைப்பூவின்கண்ணதாயின் எம்மணம் உண்டாகா என வேறுமொரு பொருள் தொனித்தல் காண்க. யானைமுகத்தை யுடையதேன் விநாயகக்கடவுள். அலரி, செவ்வந்தி, ஆம்பல், வாரிசம் என்பன பின்னையபொருட்குப் பூவையுணர்த்தும் பெயர்களாய் நின்றன.

இன்னும் ஷை நாட்டுப்படலத்து,

நடவு நட்டிடு நாரியர்க் கெளியவோ நறுஞ்செய்
வடம தற்றிட மணக்கனி விளைத்தவம் மடவார்
சுடர்செய் கற்பல சிந்தினர் சிந்தலுந் துள்ளித்
தடமு லைத்தலைப் பங்கமிட் டெறிந்தன தடிகள்.

என்னும் ௨௨-ம் செய்யுளில், பின்னிரண்டடியும் இத்தொனியுடை யனவாய் வந்தன. மகளிர் ஒளியையுடைய ரத்தினக்கற்கள் பலவற் றைச்சிந்தினர். அதற்குப்பிரதியாகச் சேற்றையிட்டெறிந்தன வயல் கள் என்னும் பொருளேயன்றி, கற்களையெறியத் தடிகளை யெறிந் தன என வேறுமொருபொருள் தொனித்தல் காண்க.

இன்னும் ஷை இரகுவுற்பத்திப் படலத்து,

வலியிரா நவ்வியு மடங்க லேறுமொத்
தொலிவிரா யெதிர்ந்துள ரேனு மோர்ந்திடின்
மெலியரோ மெல்லியர் வேற்கை யாடவர்
புலிவிரா யெறிந்திடக் களபம் போக்குவார்.

என்னும் ௨௬-ம் செய்யுளில், ஈற்றடி இத்தொனியுடையதாய் வந் தது. ஆடவர் புலிபென்னுஞ் சாந்தையெறிய மகளிர் களபமென் னுஞ் சாந்தை எறிவார்கள் என்னும் பொருளே யன்றி, ஆடவர் புலியை யெறிய மகளிர் யானைக்கன்றை யெறிவார்கள் என வேறு மொருபொருள்தொனித்தல் காண்க. புலி, களபம் என்பன பின் னையபொருட்கு விலங்கின் பெயர்களை யுணர்த்திநின்றன.

இன்னும் கந்தபுராணத்துச் சூரபன்மன்வதைப்படலத்து,

நெடுங்கலை முயன் மான் கொண்டு நிலவுமம் புலியு நீத்த
மடங்கதிர் படைத்த கோவு மளகையை யாளி தானுங்

கடங்கலுழ் கின்ற வாசைக் கரிகளுங் கடாவிற் செல்லு
மடங்கலும் வெருவச் சூரன் மாவுருக் கொண்டு நின்றான்.

என்னும் ௪௭௪-ம் செய்யுள் இத்தொனியுடையதாய் வந்தது. இதில் சந்திரனும், சூரியனும், குபேரனும், திக்கு யானைகளும், இயமனும் அஞ்சச் சூரன் மாவுருக்கொண்டுநின்றான் என்னும் பொருளே யன்றி, கலை, முயல், மான், புலி, பசு, யாளி, யானை, கடா, சிங்கம் என்னும் விலங்குகள்வெருவச் சூரன் குதிரைவடிவைக்கொண்டு நின்றான் என வேறுமொருபொருடொனித்தல் காண்க.

இன்னும் ௸ படலத்து,

மிக்குய ருவண மன்ன மிசைப்படு மெகினப் புள்ளு
மைக்குயில் சேவ லாகி மயூரமாம் வலியன் றானும்
புக்கமர் தெரிக்கு மாடற் பூவையுங் சொடிய தான
குக்குட முதலு மஞ்சக் கொக்குரு வாகி நின்றான்.

என்னும் ௪௭௨-ம் செய்யுளும் இத்தொனி யுடையதாய் வந்தது. இதில், விட்டுணுவும், பிரமாவும், இந்திரனும், வீரதுர்க்கையும், கோழிக்கொடியாய் நிற்கும் அக்கினிதேவனு மஞ்சுமாறு சூரன் மாமரமாய் நின்றான் என்னும் பொருளேயன்றி, கருடன், அன்னம், குயில், மயில், வலியன், நாகணவாய், காக்கை, கோழி என்னும் பறவைகள் அஞ்சுமாறு கொக்குப்பறவை வடிவாய் நின்றானென வேறுமொரு பொருடொனித்தல் காண்க.

இன்னும் ௸ படலத்து,

காலெனும் மொய்ம்ப னுட்கக் கட்செவி கவிழ்ந்து சோர
வாலிய வசுக்க ளேங்கி மலர்க்கர மறிக்க வெய்யோன்
பாலர்மெய் வியரா நிற்பப் பணைமுலை யரிவை மார்கள்
சேலெனும் விழிகள் பொத்தச் சேகா மாகி நின்றான்.

என்னும் ௪௭௩-ம் செய்யுளும் இத்தொனியுடையதாய் வந்தது. இதில், வாயு அஞ்ச, சேடன் சோர, வசுக்கள் கரமறிக்க, மருத்துவர் வியர்க்க, சத்தவன்னியர்கள் விழிகள்பொத்தச் சூரன் மாமரமாய் நின்றான் என்னும் பொருளேயன்றி, காலும்புயமுமுட்க, செவி சோர, கரமறிக்க, மெய்வியர்ப்ப, விழிகள்பொத்த உத்தமாங்க மென்னுமுறுப்பாய்நின்றான் எனவேறுமொருபொருள் தொனித்தல் காண்க.

இன்னும்கெடி படலத்து,

அத்தியி னரசு பேர வாலமுந் தெரிக்கி லேங்க
மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற வீரை யாவுந்
தத்தம திருப்பை நீங்கத் தாதவிழ் நீபத் தாரோ
னுய்த்திடு தனிவேன் முன்ன ரொருதனி மாவாய் நின்றான்.

என்னும் ௯௯௯-ம் செய்யுளும் இத்தொனி யுடையதாய் வந்தது. இதில், சமுத்திர ராசன் நிலைகுலைய, நஞ்சு மேங்க, வடவாமுகாக் கினி மெலிய, கடலெல்லாம் இருக்கையை நீங்கச் சூரன் மாமரமாய் நின்றான் என்னும் பொருளேயன்றி, அத்தி அரசு என்னு மரங்கள் பேர, ஆலமரமுமேங்க, வாகை வன்னி என்னுமரங்கள் மெலிய, வீரை இருப்பை என்னுமரங்கள் நீங்க மாமரமாய் நின்றான் என வேறுமொரு பொருடொனித்தல் காண்க.

இன்னும் ஒருதுறைக்கோவையிடத்து ஒவ்வொரு செய்யுளும் இத்தொனியுடையனவாய் வந்திருக்கின்றன. அவற்றுள்ளும் சில வற்றை இங்கே காட்டுதும்.

நங்காம தேனு வெனவந்த கார்செம்பி நாடனுயர்
செங்கா வியங்குடை யான்ரகு நாதன்சி லம்பின்மிக்க
வெங்காம வெய்ய விடாய்க்கிள நீர்தந்து வெவ்விடத்தை
யங்காம வல்லிநல் லீர்மறைத் தீர்நன் றறிவுமக்கே.

என்னும் ௬௦-ம் செய்யுள் இத்தொனியுடையதாய் வந்தது. இதில், காமவிடாய்க் கிளநீர்போன்ற தனங்களைத் தந்து விடம்போன்ற கண்களை மறைத்தீர் என்னும் பொருளே யன்றி, விடாய்க்கு இள நீரைத்தந்து நஞ்சை மறைத்துவிட்டீர் என வேறுமொருபொருள் தொனித்தல் காண்க.

நிலையேந்து மாளிகை வாழுநன் மாதர்க ணெஞ்சமதிக்
கலையேந்துந் தேவை ரகுநாதன் வெற்பில்வெங் கள்ளைவரிச்
சிலையேந்தும் வாணுத லீரங்கை யேந்துஞ் செயலென்னே
விலையேந்து மாணிக்க வள்ளநிங் கேவைத்து மெய்ம்மறந்தே.

என்னும் ௬௧-ம் செய்யுளும் இத்தொனியுடையதாய்வந்தது. இதில், மாணிக்க வள்ளம் போன்ற தனங்களை விட்டு வண்டு போன்ற கண்

களைக் கையினால் மறைக்குஞ் செயலாகிய இது என்னை? என்னும் பொருளேயன்றி, மாணிக்கவள்ளத்தை இங்கே வைத்துவிட்டுக் கள்ளைக்கையிலே ஏந்துகின்ற செயலாகிய இது என்ன அறியாமை? எனவேறுமொருபொருடொனித்தல் காண்க.

நல்லார் நகைக்கு மனைவளர் தாளி நனை மலரு
மல்லார் கரந்தை ரகுநாதன் றேவை வரையின்மணிக்
கல்லார் கனங்குழை யீர்மருண் டீரின்று கண்டசர
மெல்லார் வரிவளைக் கைபுனைந் தீர்குரு கெய்தவுமே.

என்னும் கூஅ-ம் செய்யுளும் இத்தொனியுடையதாய் வந்தது. இதில், சக்கிரவாகம் போன்ற தனங்கள் சிறுக்கவும் காணப்பட்டசரம் போன்ற கண்களைக் கையால் மறைத்தீர் என்னும் பொருளே யன்றி, வளையலிருக்கவும், கண்டசரத்தைக் கையில் மயங்கி அணிந்துவிட்டீர் என வேறு மொருபொருடொனித்தல் காண்க.

நெய்வாய்த் திகன்மன்னர் சோரியின் மூழ்கி நிணமருந்து
மைவாய்த்த வேற்படை யான்ரகு நாதன் மணவையன்னீர்
மெய்வாய்த்த கோல வனமுலையார் தம்மை விட்டுவளைக்
கைவாய்த்த மைவிழி யாருடன் சேர்தல் கடனல்லவே.

என்னும் எஉ-ம் செய்யுளும் இத்தொனியுடையதாய் வந்தது. இதில் முலைகளைவிட்டுக் கண்களைக்கையாற்பொத்துதல் முறைமையல்லஎன்னும் பொருளேயன்றி, முறையாக விவாகஞ்செய்த குலமகளிரை விட்டு வேசியர்களைச் சேர்தல் முறைமையல்ல என வேறுமொரு பொருடொனித்தல் காண்க.

இங்ஙனமே ஆன்றோரியற்றிய பிறநூல்களுள்ளும் இத்தொனி வருகின்றது. அதனை ஆய்ந்துணர்ந்துகொள்க.

இங்ஙனம்,
சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.

ஸ்ரீ

# பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

(கசுகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 11. ஆங்கிலேய பிரதம வித்யாப்யாஸமுறை.

1854-ம் ஹூத்தில் இங்கிலாந்திலே பார்லிமெண்டு ஸபையிலிருந்த ராஜ்ய தந்தர நிபுணர்களும் லோகோபகாரிகளுமான மஹாநுபாவர்கள் சிலர் இந்தியாவின் வித்தியாபிவிருத்தியை விசேஷமாய்க் கவனித்து அதற்காக அதிகமாகப் பணம் செலவழிக்கவேண்டுமென்று உத்தரவுசெய்தார்கள். அதை யனுஸரித்து அதற்குப்பிறகு படிப்படியாய்இங்கேகல்விப்பயிற்சி விருத்தியடைந்துவந்தது. 1871-ம் ஹூத்தில் முனிஸிபாலிட்டிசட்டமும் லோகல்பண்டு சட்டமும் ஏற்பட்டபோது ராஜாங்கத்தார் வித்தியாப்பியாஸத்திற்குத் தாம்கொடுக்கிறபணம் போதாமல் முனிஸிபாலிட்டியாரையும் லோகல்பண்டாரையும் திரவிய சகாயஞ்செய்து மேல்விசாரணை நடத்திவரவும் உத்தரவுபண்ணினார்கள். 54-ம் வருஷமுதல் 82-ம் வருஷம்வரையில் பிரதம வித்யாப்யாஸம் விசேஷமாய்ப்பலவிடங்களிலும் பரவாமற்போனபோதிலும், உள்ளவரையில் மேலும் மேலும் விருத்தியடைந்துவந்தது. அதற்குப்பிறகு இந்த ராஜதானியிலுள்ள பற்பல பாடசாலைகளிலே தேர்ச்சியில் ஏற்றக்குறைவுள்ளவரான பலஜாதிப்பிள்ளைகளும், மந்த புத்தியும் நுட்பபுத்தியுமுள்ள பிள்ளைகளும் படிக்கலாகுமென்பதைக்கருதி அவ்வவர்களுக்குத்தக்கபடி சட்டமேற்படுத்தாமல், பணத்தைப்பங்கிட்டுக் கொடுக்கவேண்டிய நிமித்தமாக, வித்யாவிசாரணைத்தலைவர் ஸகல பாடசாலைகளுக்கும் ஒரே தன்மையாய் நிர்ப்பந்தமான பல சட்டதிட்டங்களை ஏற்படுத்தலாயினர்.

குறைந்தது இவ்வளவு படிப்பாவது இருக்கவேண்டுமென்பதைக்கருதி வித்தியாவிசாரணையதிகாரிகள் படிப்புக்கு ஓர் அளவை ஏற்படுத்தினார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமல் பிள்ளைகள் ஒரு வருஷத்திற்கு அவ்வளவேதான் படிக்கவேண்டுமென்று நினைத்து உபாத்தியாயர்கள் வித்யாபிவிருத்திக்கு இடையூறாய் ஏற்பட்டார்கள்.

இச்சென்னைராஜதானியில் இப்பொழுது முனிசிபாலிட்டி பாடசாலைகளும் லோகல்பண்டு பாடசாலைகளும் மாத்திரமே யன்றி இன்னும் அநேகம் பாடசாலைகள் இருக்கின்றன. அவைகளில் சிலவற்றிற்கு வருஷவாரி இவ்வளவென்று மொத்தமாய்த் திரவியஸஹாயமும், சிலவற்றிற்கு உபாத்தியாயர் வேதனத்தை அனுஸரித்துத்திரவிய ஸகாயமும், சிலவற்றிற்கு வித்யார்த்திகளின் பரீக்ஷையின்மேல் திரவிய ஸஹாயமும் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக்கடைசி வகுப்பைச்சேர்ந்த பரீக்ஷவேதன பாடசாலைகளே இந்த ராஜதானியில் அதிகமாயிருக்கின்றன. வித்யார்த்தி பரீக்ஷையின்மேல் திரவியஸஹாயம் செய்து படிப்பிக்கும் முறை இங்கிலாந்திலிருந்ததைப் பார்த்து ஆலோசியாமல் அதை இங்கும் அப்படியே அநுஷ்டிக்கத் தொடங்கினார்கள். இங்கிலாந்திலேயே அது சரியான படிப்புமுறையல்லவென்று 1861-ம் வருஷத்திலே மாத்யூ ஆர்னல்டு என்பவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். அந்தமுறையிலுள்ள குறைகள் கைவிடப்படாமலே நாளது வரையிலும் அப்படியே அநுஸரிக்கப்பட்டு வந்தன. அந்தக்குறைகளாவன:—

(a) பரீக்ஷ வேதனம் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட விஷயங்களின் மாத்திரமே பரீக்ஷ கொடுத்துத்தேறும்படி வித்தியார்த்திகளுக்கு யோக்கியதை உண்டாக்க உபாத்தியாயர்கள் பாடுபடுவார்கள்.

(b) அதனால் படிப்பு யந்திரம்வேலைசெய்வது போல் ஒரே குருட்டு வழியாய் நடத்தப்பட்டு படிப்புக்குக் குறைவும் அழிவும் நேரிடும்படியாகிறது.

(c) பிரஜைகளைப் படிப்பிக்கும் விஷயத்தில், வாசிப்பு கையெழுத்து கணக்கு இவைகளுக்கு வெகுமதியளிப்பதனாலேயே படிப்பு விஷயத்தில் ராஜாங்கத்தார் செய்யவேண்டிய கடமை பூர்த்தியாகிவிட்டதாக நினைக்கலாகாது என்று மாத்யூ ஆர்னல்டு சொல்லியிருக்கிறார்.

(d) ஒவ்வொருவகுப்பிலும் தேர்ந்தவர்களான சில பிள்ளைகள் மாத்திரமே பரீக்ஷக்குப் பொறுக்கி யனுப்பப்பட்டார்கள்;

அதனால் மற்றப்பிள்ளைகளுக்கு உபாத்தியாயருடைய உபேக்ஷையால் படிப்பு ஏற இடமில்லாமற் போயிற்று.

(e) சிலபாடசாலைகளில் உபாத்தியாயர்கள் ஒருவருஷம் பரீக்ஷையில் தேறின பிள்ளையையே மறுவருஷமும் பரீக்ஷைக்குக்கொண்டு வந்து நிறுத்துவதுண்டு.

(f) இவ்விதமான குற்றங்களை விலக்கும் பொருட்டு உதவிப் பரீக்ஷாதிகாரிகளும் கீழுதவிப் பரீக்ஷாதிகாரிகளும் பிள்ளைகளின் யோக்கியதையைப் பரீக்ஷித்து அறிவதை விட்டுப் பாடசாலையில் வைத்திருக்கும் பிள்ளைகளின் பெயர்ப்பட்டி முதலானவைகளை அதிக ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டியதாயிற்று.

(g) பிள்ளைகள் பரீக்ஷையிலே தேறிப் பரீக்ஷைவேதனம் இவ்வளவுகொடுப்பதென்று தீர்மானமான பிறகும், முனிஸிபாலிடியிலும் லோகல்பண்டிலும் அதற்குப்போதுமான தொகையில்லாத குறைவினால் கொடுக்கவேண்டிய மொத்தத்தில் பாதியோ கால்வாசியோ கொடுக்கும்படியாக நேரிடும். அதனால் உபாத்தியாயர்கள் உற்சாகமழிந்து மறுவருஷம் அதிருப்தியோடு படிப்பிப்பார்கள்.

வித்யார்த்தி பரீக்ஷையின் மேல் திரவியஸஹாயம் செய்து படிப்பிக்கும்முறை ஸாதாரணமாய் கிராம பாடசாலைகளுக்காக ஏற்பட்டது; பட்டணத்திலுள்ள பாடசாலைத்தலைவர்களும் சிலபமென்று அதையே அனுஸரிக்கலானார்கள்.

கிராமபாடசாலைகளுக்கு வித்தியார்த்தி பரீக்ஷையின் மேல் திரவியஸஹாயம் செய்யும்முறை இப்பொழுது எடுபட்டுப்போயிற்று.

## 12. கிராமபாடசாலைகளுக்குத் திரவியசகாயஞ் செய்ய இப்போது ஏற்பட்டிருக்கும் புதுவிதிகள்.

கிராமபாடசாலைகளுக்கு இதுவரையில் கொடுத்துவந்த வித்யார்த்திபரீக்ஷை வேதனத்தின் சராசரித்தொகையை அநுசரித்து வருஷவாரி இவ்வளவு திரவிய ஸஹாயம் செய்யலாமென்று தீர்மானிக்கப்படும்.

இராஜாங்கத்தார் கொடுக்கக்கூடிய தொகையும் லோகல் பண்டார் கொடுக்கக்கூடிய தொகையும் இவ்வளவென்று தெரிந்து அதில் ஒவ்வோர் உதவிப்பரீக்ஷாதிகாரியின் விசாரணைக்கு உட்பட்டபாடசாலைகளுக்கு இவ்வளவென்று டைரெக்டர் பாகமேற்படுத்தி விடுவார்.

ஒவ்வொரு பாடசாலையின் தலைவரும், ஜூலைமீ முதல் தேதிக்குள் தங்கள் பாடசாலைக்குத் திரவியஸஹாயஞ்செய்ய விண்ணப்பமெழுதிக்கொள்ளவேண்டும். செப்டம்பர் மீ த்தில் உதவிப்பரீக்ஷாதிகாரிகள் கீழுதவிப் பரீக்ஷாதிகாரிகளைச்சபைசேர்த்துத் தமது விசாரணைக்குக்கீழ்ப்பட்ட பாடசாலைகளுக்குப் பணத்தைப் பங்கிட ஏற்பாடு செய்வார்கள்.

இனி, பாடசாலைகளின் தேர்ச்சியைக்கண்டறியவும், அதிலுள்ள குற்றங்களை எவ்விதமாகநிவர்த்திசெய்யவேண்டுமென்பதைப்பற்றி உபாத்தியாயர்களுக்கும்விசாரணைத்தலைவர்களுக்கும்உபாயங்கள்சொல்லவும் பரீக்ஷாதிகாரிகள் பாடசாலைகளைப் பார்வையிடுவார்கள். பார்வையிடும் காலத்தில் அதற்குக் கொடுக்கும் தொகையைக்குறைக்கலாமோ அல்லது உயர்த்தலாமோ அதைப் பரீக்ஷாதிகாரிகள் தெரிந்துகொள்ளவேணும். பாடசாலை ஒழுங்கு, ஏற்பாடு, போதனைமுறை, மேல்விசாரணை, கட்டிடம் இவைகளிலுள்ள குறைபாடுகளையும், பிரதி தினம் பிள்ளைகள் சரியாக வராமையையும், பாடசாலை நடத்தும் நாள் கணக்குக்குறைவுபடுதலையும்பரியாலோசித்துத்திரவியஸகாயம் செய்யும் தொகையைக் குறைக்கவேண்டியது.

படிக்கும் பிள்ளைகளுடைய தேர்ச்சியையும் முக்கியமாய்ப் பிரதிதினம் பிள்ளைகள் சரியாகவருவதையும், பிள்ளைகளுடைய புத்தியைப் பண்படுத்தவும், உற்றுப்பார்க்குந்திறமையை அபிவிருத்திசெய்யவும் ஏற்றதான போதனாப்யாஸமுறையை உபயோகித்துவருவதையும், மற்றும் பிள்ளைகள் வாழ்நாளில் அவரவர் நிலைமைக்கு ஏற்றபடி சுகமாக வாழவேண்டிய வழிகளுக்கு உரியராக்கப் பொதுவாக முயல்வதையும் பார்த்துத் திரவியஸகாயம் செய்யும் தொகையை அதிகப்படுத்தவேண்டியது.

## 13. பிரதமவித்யாப்யாஸத்திற்குப் பொருந்தாத படிப்புமுறை.

பிள்ளைகள் ஐந்தாவது பிராயத்திலேயே பிரதமவித்யாப்யாஸ பாடசாலைகளில் சேர்ந்து அங்கேயே 5-வருஷகாலமிருக்கிறார்கள். இந்த ஐந்துவருஷகாலத்துப்படிப்பைத் தெருத்திண்ணைப்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இரண்டுமூன்று வருஷத்திலேயே தெரிந்துகொண்டு இவர்களைவிட இன்னும் அதிகமான தேர்ச்சியுடையவர்களாகிறார்கள்.

படிப்புச்சட்டத்தில் படிக்கவேண்டிய பாடங்களை நிர்ப்பந்தமான விஷயமென்றும், இஷ்டமான விஷயமென்றும் இரண்டுபாகமாகப் பிரித்திருக்கிறார்கள். நிர்ப்பந்தமான விஷயங்கள்; 1. (a) வாசகப்படிப்பு, (b) வாய்ப்பாடம், (c) இலக்கணம், 2. கையெழுத்தும் வர்ணக்ரமமும், (3) கணிதம்.

இஷ்டமான விஷயங்கள்: 1 சாஸ்திரசங்கிரஹம், 2 இரண்டாவது பாஷை, 3 சித்திரமெழுதல், 4 இந்துதேசசரித்திரம், 5 பூகோளம், 6 தையல்வேலை, 7 ஸங்கீதப்பாட்டு, 8 சுகாதாரவிளக்கம், சரீராரோக்கிய சாஸ்திர சங்கிரகம், 9 கிருஷித்தொழில், 10 நிலஅளவை நூல், 11 சென்னைவித்தியாப்பியாசவிதியின் 5-ம் அதிகாரத்திற் சொன்ன கைத்தொழில்களில் ஏதாவது ஒன்று, இவைகளாம்.

ஒவ்வொரு வித்தியார்த்தியும், நிர்ப்பந்தமான எல்லா விஷயங்களும், இஷ்டமான விஷயங்களில் ஏதாவது இரண்டும் அவசியம் படிக்கவேண்டும். பரீக்ஷை வெகுவாக வாய்ப்பரீக்ஷையே. எழுதவேண்டிய இரண்டொரு விஷயங்கள் பலகையிலே பரீக்ஷை செய்யப்படும். ஆகையால் பிள்ளைகள் பேறுவைக்கையாளவும் அப்பியஸிப்பதில்லை.

இவ்விதமான ஏற்பாட்டில் பிள்ளைகளுக்கு நிர்ப்பந்தமான விஷயங்களில் உண்டாகும் தேர்ச்சி மிகவும் திருப்திகரமாயில்லையாகையால், அதனோடு இஷ்டமான விஷயங்களையும் படிக்கச்செய்து பிள்ளைகளை வருத்தாமல் அவைகளை நீக்கிவிடுவது நலம்.

சாதாரணமாய் இந்தப் பாடசாலைகளில் இந்துதேச சரித்திரத்தையும் பூகோளத்தையும் இஷ்டமான விஷயங்களாய் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அவை பிறகு மேலே கீழ்த்தரப்பாடசாலைகளில் மூன்று வருஷமும், உயர்தரப்பாடசாலைகளில் மூன்றுவருஷமும் ஆக ஆறுவருஷகாலம் படிக்கவேண்டியவையாகையால், அவைகளை இந்தப் பிரதமவித்தியாப்பியாஸப் படிப்பு முறையிலிருந்து நீக்கிவிடுவது உத்தமம். இஷ்டமான விஷயங்களில் 1, 8, 9, 10, 11 இவைகள் இளம்பிராயமான பிள்ளைகள் புத்திக்குஎட்டாத விஷயங்களல்லவா?

## 14 நிர்ப்பந்தமான விஷயங்களில் பிள்ளைகளுக்கு உண்டாகும் தேர்ச்சி என்ன?

நிர்ப்பந்தமான விஷயங்களில் பிள்ளைகளுக்கு உண்டாகும் தேர்ச்சி மிகவும் சொற்பமென்பது இதனடியில் குறிக்கும் படிப்புச்சட்டத்தினால் நன்றாகவிளங்கும்.

I. (a) அந்த வகுப்புக்கென்று ஏற்படுத்தப்பட்டு அந்தவகுப்பில் அந்தவருஷம் படிக்காத ஏதேனுமொரு புத்தகத்திலிருந்து சிலவரிகளும் கையெழுத்துப் பிரதியிலிருந்து சிலவரிகளும் சுலபமாயும் திருத்தமாயும் கருத்துவிளங்கப் படிப்பது.

(b) ஐந்துவருஷத்திற்கு 140-வரி வாய்ப்பாடமாகச்சொல்லுதல்.

(c) தாத்பரியம் சொல்லுதல்.

(d) பெயர்ச்சொல் வினைச்சொற்களும், எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களும் சொல்லுதல்.

II. கையெழுத்து.

III. கணிதம்:—தொடர்விதிகள், இனமாற்றல், பின்னம், கடைக்கணக்கு.

IV. பூகோளம்.

(a) பூமியின் உருவமும், பரிமாணமும்; சூரியனுக்கும் சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய பொதுவான போதனை.

(b) பூமியிலுள்ள கண்டங்களும் ஸமுத்திரங்களும்.

(c) அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு புஸ்தகத்திலிருந்து சென்னைராஜதானி, குடகு, திருவனந்தபுரம், மைசூர், கொச்சி, ஐதராபாத்து இவைகளும், இந்தியாவிலுள்ள மற்ற நாடுகளின் மேல் தோற்றமும்.

v. இந்துதேச சரித்திரம்.

ஐந்து வருஷகாலம் பள்ளிக்கூடத்திலிருந்து கேவலம் எழுதப் படிக்க மாத்திரமே தெரிந்து கொள்வது போதுமா? இஷ்டமான விஷயங்களைப் படிப்பு முறையிலிருந்து விலக்கிவிட்டால், இந்த ஐந்து வருஷகாலத்தில் சுதேசபாஷையிலே நல்ல தேர்ச்சி யுண்டாகி அடிப்படை உறுதியாகிவிடலாம்.

## 15. பொருந்தாத பாடபுஸ்தகங்கள்.

பிள்ளைகள் படிப்பதற்காக ஏற்பட்ட பாட புஸ்தகங்களால் உண்டாகும் தீமைகள் மிகவும் அதிகமாகி அதனால் கோதாவரி ஜில்லா உபாத்தியாயர்கள் ஒரு மஹாஸபைகூடி அந்த விஷயத்தைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக் கொள்ளலானார்கள். அந்த மஹாஸபையில் பிரதமவித்யாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர்களும் த்விதீயவித்யாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர்களுமாய் ஏறக் குறைய நானூறுபேர் சேர்ந்தார்கள். அந்தச் சபையில் செய்த தீர்மானமாவது:—

" இப்போது கவர்ன்மெண்டு பாடசாலைகளிலும் லோகல்பண்டு பாடசாலைகளிலும் வழங்கும்படி ஏற்பட்டுப் பாடபுஸ்தக சபையாராலும் கவர்ன்மெண்டாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாட புஸ்தகங்களில் அநேகம் எந்தெந்த வகுப்புக்காக ஏற்பட்டனவோ, அந்தந்த வகுப்புக்குச் சரியான அளவுள்ளனவாயுமில்லை, சரியான பாஷை நடையுள்ளனவாயு மில்லையாகையால், பாடபுஸ்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டு பாடசாலை உபாத்தியாயர்கள், லோகல்பண்டு போர்டு பாடசாலை உபாத்தியாயர்கள், த்விதீயவித்யாப்யாஸ அடிப்படைப் பாடசாலை உபாத்தியாயர்கள், பிரதம

வித்யாப்யாஸபாடசாலை உபாத்தியாயர்கள் இவர்களுடைய அபிப்பி ராயத்தை அதிகமாய் அநுசரிக்கும்படிக்கும், இந்த ஜில்லாவில் இப் பொழுது உபயோகப்பட்டு வருகிற சுதேச பாஷைப் பாட புஸ்த கங்களுடைய குணதுணங்களைக் கண்டறியும் சாமர்த்தியமுள்ள தெலுங்கு பண்டிதர்களைப் பிரதிநிதிஸபையாராக நியமிக்கும்படிக் கும், அந்த ஸபையாருடைய அபிப்பிராயத்தை யனுசரித்து அந்தந் தப் பாடசாலைகளுக்கு ஏற்றவைகளான நல்ல பாடபுஸ்தகங்களைப் பிரசுரஞ்செய்ய உற்சாகப்படுத்தும்படிக்கும் வேண்டிக்கொள்ளப்படு கின்றது" என்பதாம்.

இத்தேசத்தில் நெடுங்காலமாக தேவஸ்தோத்திரமாயும் நீதிவி ஷயமாயுமுள்ள இரண்டடி நாலடியுள்ள சிறுபாடல்களைப் பிள்ளைக ள் சிறு பிராயத்திலே பாடம்பண்ணுவது வழக்கமாயிருந்தது. இந் தக் கவர்ன்மெண்டாருடைய பாடபுஸ்தகங்களைப் படிக்க ஏற்பட்ட பிறகுகூட பிரதம வித்யாப்பியாஸ பாடசாலைகளில் பிள்ளைகள் டை ரெக்டர் அவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் உத்தரவின்படி பதிப்பிக்கப் பட்ட நீதிமஞ்சரி முதற்பாகம் முழுமையும் படித்துவந்தார்கள். அந் தப் புத்தகம் எட்டுப்பதிப்புப் பதிப்பிக்கப்பட்டது. 1884-ம்வருஷ கடைசியாக, சென்னைப் பாடசாலைச் சுதேசபுஸ்தகச் சங்கத்தார் 30,000-புஸ்தகம் அச்சிட்டார்கள். அவ்வளவு புஸ்தகங்களும் செல வாகிப் படிக்கப்பட்டனவன்றோ?

ஐந்து வருஷத்தில் 140-வரியே பாராமல் ஒப்புவிக்கவேண்டு மென்று கல்விப்பயிற்சிச் சட்டம் ஏற்பட்ட பிறகு, இந்தப்புஸ்தகம் உபயோகமில்லாமற் போய்விட்டது. பிறகு தமிழ்ப்பாட புஸ்த கங்களைப் பிரசுரஞ் செய்யும் ஆங்கிலேய புஸ்தக வியாபாரிகள் தாம் பதிப்பிக்கும் வாசகபுஸ்தகங்களிலேயே அந்தந்த வகுப்புக்கு வேண் டியவளவு பாட்டையுஞ்சேர்த்துப் பதிப்பிக்கலானார்கள். 140-வரி ஒப்புவிக்கவேண்டுமென்கிற கல்விப்பயிற்சிச் சட்டம் கிராமபாடசா லைகளுக்காக ஏற்பட்டது. தமக்குப்படிப்பது சுலபமாயிருக்கிற தென்று பட்டணத்துப் பாடசாலை உபாத்தியாயர்களும் பிள்ளைகளு டைய விருத்தியைச்சிறிதும் கவனியாமல், தாமும் அந்தச் சட்டத் தை அநுசரிக்கலாயினார்கள்.

பிள்ளைகள் பாட்டுக்களைப் படிப்பதென்றால், அர்த்தம் தெரியாமல் குருட்டுப்பாடம்பண்ணுவதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படிப் படித்தது எக்காலத்திலுமில்லை. அர்த்தத்துடனே தான் நீதிமஞ்சரிப்பாட்டுப் படித்துவந்தார்கள். பாடம்பண்ணவேண்டிய தேவஸ்தோத்திரம் முதலான பாடல்கள் வயதானபிறகு படிக்கத் தொடங்கினால் மனப்பாடமாகாவாகையால் அவைகளைச் சிறுவயதில் அவசியம் பாடம்பண்ணித்தானே தீரவேண்டும். பாடல்களைமட்டும் பாடம் செய்தார்களேயொழிய அர்த்தத்தைப் பாடம்பண்ணினவரில்லை.

(இன்னும் வரும்)

சேஷப்பாடி-இராஜகோபாலாசாரியர்.

---

உ

# கொழுத்துன்னூசியின் முடிவுரை.

மாசிமாதத்துச் செந்தமிழில் ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் "கொழுவென்றது பாயிரத்தையும் துன்னூசி யென்றது நூல் கேட்கின்றானையும் குறித்துநிற்கும் உவமங்களாம்" என்றும், கொழுவென்பது கொழுப்பென்றுந் துன்னூசியென்பது அக்கொழுப்பிற் றோய்ந்த தோற்றுன்னூசி யென்றும் எழுதினார்கள். அவ்வுரை பொருந்தாமை காட்டுதும்.

கொழுச்சென்றவழித் துன்னூசி யினிது செல்லுமாறுபோலப் பாயிரங்கேட்டார்க்கு நூலினிது செல்லுமென்ற வாசகத்துள், இனிதுசெல்லற் கெழுவாய் நூலேயாதலின் துன்னூசி நூலைக்குறித்தலன்றி நூல்கேட்கின்றானைக் குறித்த லெவ்வாற்றானுமின்று. அற்றன்று: நூலினிது செல்லுமென்றற்கு நூல்கேட்கின்றான் இனிது செல்லுமெனலே கருத்தெனின், நூல்கேட்கின்றான்யாங்கினிது செல்லுமெனின் நூலின்கட் செல்லுமெனலே விடையாதலான், நூல் என்பது நூல்கேட்கின்றானை யுணர்த்தி எழுவாயாகிப் பின்னும் நூலின்கட் செல்லுமென ஏழாவதுருபேற்று இடப்பொருள்பயத்தல் கூடாமையானும், நூலினிது செல்லுமென்றதன்முன் பாயிரங்கேட்டார்க்கு

என்றிருத்தலின் பாயிரங் கேட்டார்க்கு நூல்கேட்கின்றுழி இனிது செல்லுமெனவியைந்து ஏனையோர்க்கு நூல்கேட்கின்றுழி இனிது செல்லாதெனப் பொருள்பயந்து பாயிரங்கேட்டபின் நூல்கேட்டல் வேண்டுமென்னும் பொருள்பயவாமல் வழுப்படலானும் அக்கருத்தும் பொருந்தாது.

இனிப் பாயிரங்கேட்டார்க்கு அது சென்றவழி நூலினிது செல்லுமென்பதே பொருளாகலின் அதற்கேற்பக் கொழுச்சென்றவழி யென்பது கொழுவானது சென்றவழி யென எழுவாயாதலன்றிக் கொழுப்பின்கட் சென்றவழி யென ஏழாவதுருபேற்று விரிதலுங் கூடாது. கூடுமெனின், கொழுப்பிற்சென்றவழித் துன்னூசியினிது செல்லுமென உவமையை விரித்தாலொப்பப் பாயிரத்துட்சென்றவழி நூலினிது செல்லுமெனப் பொருளையும் விரித்தல்வேண்டும். அங்ஙனங்கொள்ளிற் பாயிரத்துள் நூல்செல்லல் கூடாமையின் அசம்பவமாம். அன்றியும் கொழுப்பிற் சென்ற துன்னூசி இனிதுசெல்லல் அக்கொழுப்பிலோ பிறிதொன்றிலோவென வினவின், விடையின்மையறிக. இவ்வாற்றாற் கொழுவென்பது கொழுப்பையுணர்த்துமெனக்கொண்டு கூறியவுரை முற்றும் பொருந்தாமை கண்டுகொள்க.

இனிக் கொழு உழுகொழுவென்றும் துன்னூசி கலப்பையின் ஓருறுப்பென்றுங் கூறிய பொருள் பொருந்தாமை முன்னரே விவேகபானுவில் வெளிவந்தது. உழுகொழுவுந் தையலூசியுமெனக்கூறிய பொருள் பொருந்தாமையும், ஸ்ரீமத்-கோவிந்தசாமிச் சோழகர் அவர்கள் அறிவாதத்திற் கூறியபடி சோழவந்தான் ஸ்ரீமத்- அ. சண்முகம்பிள்ளையவர்கள் கொழுவையுந் துன்னூசியையும் ஒருகருவியினுள்ள இரண்டுறுப்பாகக்கொண்டிலரென்பதும், ஸ்ரீமத்-அ. சண்முகம்பிள்ளையவர்கள் கொழுவிற்குக்கொண்ட பொருள்-செம்மார் தோற்கருவிசெய்யுங்காலைத் துன்னூசி நுழைதற்கு வழியாகுங் கோலாகிய பிறிதொரு கருவியென்பதும் துன்னூசி தைக்குமூசியென்பதும் சென்ற தஞ்சைத் தமிழகத்திற் காணப்பட்டன. இக்காலத்திற் செம்மார் கொழுவைக் குத்தூசியெனவும் துன்னூசியைப் பின்னூசி தைப்பூசியென் அடையொடும் ஊசியென அடையின்றியும் வழங்குகின்

றனர். துன்னலுந் தைத்தலு மொருபொருளவாயினாற்போல கொழுவலுங் குத்தலும் ஒருபொருள் பயக்குஞ் சொற்களாம். குத்தற்றொழில் குற்றல் எனவும் வழங்கப்படுகின்றது. குற்றலுந் தைத்தலுங் கூடியவழியே செம்மார்வினை முடிவுறும். குற்றல் வினைசெய்யுங் கருவியே கொழுவெனப்படும். தைத்தல் வினைசெய்யுங்கருவியே துன்னூசி யெனப்படும். அத்தொழில்களுள் குற்றல் முன்னுந் தைத்தல் பின்னுமாக நிகழும். இதனைக் 'குற்றித்தைத்த, காலுக்குத் தோற்செருப்பில்லை யென்பார்க்கும் கனகதண்டி, மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும்விதனமொன்றே' என்றசெய்யுளானுமறிக.

இவ்வாற்றாற் குத்தூசியுந் தையலூசியுமெனக்கொண்ட பொருளே முன்னோர் கருத்தொடு முரணாது உவமைக்குப் பொருந்துவதாய முடிவுரையாம்.

மு. சாம்பசிவநாயனார்.

சாலியமங்கலம்.

---

# கொழுவுந் துன்னூசியும்

## பழையவுரை.

"கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல, பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்" என்பதற்கு, பண்டுதொட்டுப் பயின்றுவாராநின்ற பொருளினுள்ள குற்றம் இன்னதெனப் புலப்படுத்தாது, புதிதுபுதிதாகப் பலரும் பலபொருள் கூறிப்போகின்றனர். அவர்கள் அங்ஙனம் கூறுதற்குக்காரணம் இன்னதெனப் புலப்படவில்லை. புலப்பட்டபொருளைத் தள்ளுதலும் புலப்படாப்பொருளைக்கொள்ளுதலும் உரைசெயும்முறையாகுமா? பண்டைப்பொருள் பொருந்தாதாயின் அதனை அநுவதித்து, அது பொருளன்றென்பதற்குத்தக்க காரணங்காட்டி, அதன் பின்னன்றோ தத்தங் கோட்பாடுகளை நிறுவுதல் முறைமை? அங்ஙனங்கூறாது வெவ்வேறு பொருள் தோன்றியவாறு கூறியிருத்தலால் பயின்றுவருவம் பொருளறியா

தார், உண்மைப்பொருளின்னதெனத் தெரியாது மயங்குகின்றனர். அங்ஙனம் அவர்கள் மயங்காதுணரவேண்டி நுண்ணிய நூலுணர்வுடையபெரியோரால் கொள்ளப்பட்டுப், பயின்றுவராநின்றபொருளைப் பின்வருமாறு எழுதுகின்றேன்.

“கொழுச்சென்றவழித் துன்னூசி இனிதுசெல்லுமாறுபோல, பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு, நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கும்” என்பதுவாக்கியம். இதனுள் ‘கொழுச்சென்றவழித்துன்னூசி இனிது செல்லல்’ திருட்டாந்தம்; ‘பாயிரங்கேட்டார்க்கு நூலினிது விளங்குதல்’ தார்ட்டாந்தம். திருட்டாந்தத்துக்கேற்ப, ‘பாயிரஞ்சென்றவழி நூலினிது செல்லும்’ எனல்வேண்டுமாயினும், அதனாற் போந்த பொருள் ‘அறிதலே’ ஆதலால் அப்பொருள் விளங்கக்கூறுவார், ‘பாயிரங் கேட்டார்க்கு நூலினிது விளங்கும்’ என்றார். இங்கு, கேட்டலும் விளங்கலும் அறிதற்பொருள் பயந்து நிற்றல் காண்க. பருப்பொருட்டு, நுண்பொருட்டு என்னும் அடைகள், பாயிரம் நூல் என்பவற்றின் இயல்புணர்த்திக் கட்டுரைச்சுவைபடநின்றன. கொழு என்பதற்குப் பலரும் வேறுவேறு பொருள் கூறினும், அது, சார்புமுதலியன வேண்டாது இயற்சொல்லாய் நின்றே கலப்பையுறுப்பொன்றினை உணர்த்தும் ஆற்றலுடையதென்பது உலகப்பிரசித்தம். அன்றியும் “பிடிவாயன்ன மடிவாய் நாஞ்சில், உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றி” என்னும் பெரும்பாணாற்றுப்படையுரையில், “பிடியினது வாயையொத்த வளைந்த வாயையுடைய கலப்பையினுடைய, உடும்பினது முகத்தையொத்த, பெருங்கொழு மறைய அமுக்கி” என்றிருத்தலாலும் விளங்கும்.

சார்புமுதலிய விரும்புந் திரிசொல்லாற்றலினும் தானே பொருளையுணர்த்தும் இயற்சொல்லாற்றல் வலியுடைத்தாதலால், கொழு என்பது, முதலிற் கலப்பையுறுப்பையே உணர்த்துகின்றது. துன்னூசி யென்பது, பலபொருளுடையதாயினும், அக்கொழுவின் சார்பினால், அதனைப்பின்பற்றிச் செல்லும் ‘உழுமுனை’என்னும்கலப்பையுறுப்பை உணர்த்துகின்றது. இவ்வுறுப்பினை ‘முகவாள்’ ‘துன்னூசி’ ‘உழுமுனை’ ‘கலப்பைக்கூர்’ ‘குத்தி’ எனஉழவர்கள் பலபெயரால்

வழங்குகின்றனர். துன்னல் என்னும் சொற்குப் பலவேறு பொருளுளவாயினும், இங்கு உழுதலே பொருளாகக் கொள்ளப்படும்; இதற்கு, உழுதற்றொழிலில், ஏவப்படுவோரை ஏவுவோர் "துன்னு" எனச்சொல்லுதலும், மண்கிளைக்கும் ஒருசார் எலியைத் "துன்னெலி" எனவழங்குதலும், எலிதோண்டிய புழையை 'எலித்துன்' எனவழங்கலும் தக்க சான்றாகும். இவைபாண்டிநாட்டில் வழக்கின்கட் காணப்படுகின்றன. அன்றியும், உழுதற்றொழிலே—தைத்தல், பாய்தல், போழ்தல், குத்தல்,—இவற்றின் சமானதர்பமுடைமையால் கௌணலக்ஷணைபற்றி அப்பெயரால் வழங்கப்பெற்ற தெனினும் ஆம். இவ்வாறே, 'கொளுத்தக்கொண்டு' எனவும், 'அறிவு கொளுத்தி' எனவும் ஒன்றன் வினையால் கௌணலக்ஷணைபற்றிப்பிறிதொன்றற்கும் வழங்கிவருதல் மரபாதல் கண்டு கொள்க. ஊசி-முட்போல நீண்டமுனையுள்ளது; அஃது, இங்கு துன் என்னும் அடையால் அவ்வாறுள்ள கலப்பைக்குத்தியை உணர்த்திற்று; இக்குத்தியாகிய துன்னூசிக்கு முற்பட அதன்கண் யாப்புற்றிருப்பது கொழுவாதலால், அது சென்றவழியே துன்னூசி இடர்ப்படாது நிலத்திற் செல்லுகின்றது. அவ்வாறே, நூலின் முற்பட யாக்கப்பட்ட பாயிரஞ்சென்று நுழைந்த உள்ளத்து, நூலும் இனிது நுழையும் என்பது பொருளாயிற்று. ஆகவே, பொருளாற்றலால், கொழுச்செல்லாதவழித் துன்னூசி தனியே நின்று நிலம் போழ்ந்து இனிது செல்லாதவாறு போல, பாயிரங்கேளாத நெஞ்சில் நூல் தனியே இனிது செல்லாதென்பதும் பெறப்பட்டது. இதனாற் பாயிரத்தின் சிறப்புக் கூறப்பட்டதாம்.

இதுவே பண்டுதொட்டுப் பயின்று வராநின்ற பொருளென்பதனைப் பின்வரையப்படும் செய்யுளானும் அறிக.

"இசைபடும் பருப்பொருட்டாமிலக்கியஞ் சென்றவாறே
வசைதவிர் நுண்பொருட்டாமிலக்கணம் வயங்கிச் செல்லும்
நசையுணரொருவன் மாட்டு: நறும்புனல் வயலின் மாட்டும்
அசைவிறின் கொழுச்செல்லாயே துன்னூசி யழகிற் செல்லும்"

இச்செய்யுள், மகாவித்வான்-ஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய திருவாரூர்த் தியாகராஜலீலை நாட்டுப்படலத்தின்கண் உள்ளது.

இதனை அச்சிட்ட மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களும், இச்செய்யுளினரும்பதவுரையில், "துன்னூசி - கலப்பையின் ஒருறுப்பு" என எழுதியிருப்பதும் இதற்குச் சான்றாகின்றது.

ஆகவே, கொழுச்சென்றவழிக் கலப்பையின் முகவாளினிது சென்று நிலத்தைப் பண்படுத்திப் பலவகைப்பயிர்களை விளைவிக்குமாறுபோல, பாயிரங்கேட்டவழி நூலினிது சென்று மணமாசகற்றி அறமுதற் பொருள்களை விளைவிக்குமென்பதும் பெறப்படும்.

இவ்வாறன்றிக் குத்தித்தைத்த தோற்செருப்பும் கொழுப்பும் கொண்டு காட்டுவது ஏனோபமையாகாதா ?

ஏரெழுபது முதலிய இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் கலப்பைக்குத்தி துன்னூசியென வழங்கப்படாமையால் இப்பொருள் கொள்ளப்படாதெனின், அவ்வாறே அவற்றில் துன்னூசி என வழங்கப்படாத ஊசிக்காதினையேனும் ஊசியையேனும் எவ்வாறு கொள்ளுதல்கூடும் ?

'ஊசியொடுகுபின்ற தூசுமபட்டும்' என்புழிப்போல ஊசியென்பது அடையடாது தனியே நின்று அப்பொருளுணர்த்தும் மாற்றலுடையதாயிருப்பத், துன்னூசியென வாளா அடைகொடுத்துக்கூறுவதெதற்கு ?

அதனின் வேறாய ஒத்தபொருளைக் கூறுமிடத்து 'முள்ளினூசி' 'பொன்னினூசி' யென்றற்றொடக்கத்தன செய்யுளினும், கூரைவேய்தற்கண் யாக்கைசெலுத்துங் கருவியைக் 'குத்தூசி' யெனவும், கடிதங்கள் குத்தும் ஊசியைக் 'குண்டூசி' யெனவும் வழக்கினும் அடைகொடுத்துக்கூறுவது முறைமையன்றோ ?

அவ்வாறே மண்ணைக் குத்திச்செல்கின்றமைபாற் 'குத்தி' என்னும் உறுப்பையும் துன்னூசியென வழங்குதல் தகாதா? இத்தொடக்கத்தன பிறவும் கண்டு ஆராயத்தக்கன.

திரு. நாராயணையங்கார்:
தலைமை உபாத்தியாயர், சேந்தமிழ்க் கலாசாலை.
தமிழ்ச்சங்கம், மதுரை.

# வேளிர் வரலாற்று மறுப்பு.

"தேவரெல்லாங்கூடி யாம்சேர இருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. அதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற் குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்றிசைக் கட்போதுகின்றவர், துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர்பதினெண்மரையும், பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை யாண்டியங்காமை விலக்கினர்", என்பர் நச்சினார்க்கினியர்.

இவற்றுள்ளே துவராபதி நிலங்கடந்த நெடுமுடியண்ணலென்பது, துவாரகையை யுண்டாக்கி ஆட்சிபுரிந்தருளிய திருமாலவதாரமாகிய கண்ணபிரானையே குறிப்ப தென்பது தெளிவாம் என்பர் ஸ்ரீமது ராகவையங்கார். செந்தமிழ்த்தொகுதி ௩, பகுதி-எ. காண்க.

சிவபெருமான் பனிமலையில் உமாதேவியாரை மணந்தருளிய காலத்துத் தேவரெல்லாங் கூடினமையின், தென்புலம் உயர்ந்து வடபுலந்தாழாநிற்ப, உரிமைநோக்கிக் குறுமுனியைப் பொதியிலின்கட் சென்றிருக்கவென்று அப்பெருமானருள, அகத்தியனார் அங்குள்ளார் செந்தமிழ் மக்கள், அஃதறியேன் அங்கு எங்ஙனம்சென்றிருப்பல் என அம்முனிவரர்க்குச் செந்தமிழ்வரந் தந்தருளி ஆண்டுச் செல விடுத்தனன் என்று கந்தபுராணங்கூறும்.

" நடுவு நில்லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுக்கின்ற தெம்பெரு மானென்ன வீசன்
நடுவுள வங்கி யகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரொன் றானே." (திருமந்திரம்.)

(க) உமாதேவியாரை மணந்தருளிய காலம் தற்புருடகற்பம் பங்குனிமாதம் நிறைமதிசேர்ந்த உத்திர நாளெனின், அக்காலத்துக் கண்ணபிரானவதாரம் உளதாயிற்றோ ?

பிரமகற்பம், விண்டுகற்பம், உருத்திரகற்பம், மகேசுரகற்பம், சதாசிவகற்பம், சிவகற்பம், என்பவற்றுள், தற்புருடகற்பம்—சிவ கற்பத்தின் பேத மென்பர்.

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர்மேய பொருந" (மதுரைக்காஞ்சி.)

"இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடி போக்கின, கிட்டுத ற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனாயிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே" என்பர் நச்சினார்க்கினியர். இதனால் அகத்தியனார் இராவணனைத் தமிழ் நாட்டையாளாதபடி போக்கினபின், அவன் இலங்கைக்குப்போயின னென்பதும், பிறகு இராமச்சந்திரமூர்த்தி வென்றனர் என்பதும் பெறப்படலின், அக்காலத்துக்கண்ணபிரானவதாரம் இலதென்பதே துணிவாம்.

(உ) கண்ணபிரான் தேவராகலின், தேவரெல்லாங் கூடுழி, ஆண்டுச்செல்லாது துவராபதியிலிருத்தற்குக் காரண மென்னை? தேவரென்னாது தேவரெல்லா மென்றலின், செல்லாத தேவர் ஒருவரு மிலரென்பது தேற்றம்.

(ங) நிலங்கடந்த நெடியோனெனின், கண்ணபிரானென்பது ஓர்சார் பொருந்தும். சூரசேன மகாராஜன் முடிதரித்து அரசு தாங்கினமையானும், யயாதியின் சாபத்தால் கண்ணபிரான் முடிதரித்து அரசுதாங்காமையானும், நெடுமுடியண்ணலெனிற் பொருந்துமோ? நெடிது காலம் முடிதரித்து அரசுதாங்கின மன்னவன், நெடுமுடியண்ணலெனப்படுவன்.

(ச) நிலங்கடந்த நெடியோ னென்பதும் வாமனனுக்குப்பொருந்துமே யல்லால் பிற்பட்ட கண்ணபிரானுக்குப் பொருந்துமோ? மூலநாயகனாகிய திருமாலுக்கெனிற் பொருந்தும்.

(ரு) அரசர் பதினெண்மரும், பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரும், அருவாளரும், கண்ணபிரான் வழியின ரென்பது உண்மையாயின், கிருட்டிணனென்றுவது கண்ணனென்றுவது விதந்து

கூறுது கத்திய நடையில் நிலங்கடந்த நெடுமுடியண்ணலெனப் பொதுப்படக் கூறியதற்குக் காரணமென்னை?

(௬) நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் என்பது ஏழாவதில் வருமேயல்லால் வமிசத்தை யுணர்த்துவ தெங்ஙனம்! "இது மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன்" என்றமையின் ஏழாவதென்பது தேற்றம்.

(௭) ஒருவழிப்பட்டவராயின், அரசர்பதினெண்மர் பதினெண்கோடிவேளிருள்ளிட்டார் அருவாளர் எனப்பாகுபாடு செய்து கூறினமைக்குக் காரணமென்னை? அவருள்ளும் அருவாளரை வன் கூட்டிப் பிரித்தல் வேண்டும்?

(௮) கண்ணபிரான் பாரதகாலத்தவனுகலானும், அக்காலத்தில் பாண்டியன் முதலோர் பெருவாழ்வு, வடமொழி தென்மொழி நூல்களாற் புலனாகின்றமையானும், பாண்டிநாட்டு ளொன்றாய மணலூர் என்னுந் தமிழ்த்தொடர் வியாச பாரதத்து வருகின்றமையானும் "காடுகெடுத்து நாடாக்கி" யெனின் கண்ணன் வழியினர் பெருகுவதற்குத் தென்னாடு காடுகொண்டழிந்து பட்டதோ?

சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனென்பான் பாண்டவப் பெரும்படைகளுக்கு உணவளித்தவன். அகத்தியனுர்க்கு முன்னரே செந்தமிழ் உளதெனின் செந்தமிழ்நாடு முளதாயிற்றன்றோ?

(௯) "நச்சினார்க்கினியர் கூற்றுப்படி வேளிரென்பார் துவாரகையை யாண்ட கண்ணபிரான் வழியினராயின், அவர்களை நாம் யாதவரென்றே கூறலாம்" என்பதுள் வழியினராயின் என்பது

> "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்."

என்பது போல வழியினராகாமையின் என மறைப்பொருள் பயக்கின்றது.

(௧௦) "நீயே, வடபான் முனிவன் தடவினுட் டோன்றிச்
செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே." (புறம்-உ0௧)

"நீதான் வடதேசத்து முனிவரொருவரது யாகபாத்திரத்திற் றோன்றிச் செம்பாலழகாகச் செய்யப்பட்ட மிகப்பெரிய கோட்டையையுடைய வெறுத்தலில்லாத பொன்மயமாகிய துவாரகாபுரியை யாண்டு நாற்பத்தொன்பது தலைமுறையாக வந்த வேளிருக்குள்ளே சிறந்த வேளாயிருக்கின்றாய்" என்பது ஸ்ரீமது ராகவையங்காருரை.

"நீ தான் வடபக்கத்து முனிவனுடைய ஓமகுண்டத்தின்கட் டோன்றிச் செம்பாற் புனைந்து செய்காலொத்த சேய்மையையுடைய நெடியமதிலையுடைய துவாராபதியென்னும் படைவீட்டையாண்டு வெறுப்பில்லாத கொடையினையுடையாராய நாற்பத்தொன்பது தலைமுறை தொன்றுபட்டுவந்த வேளிர்களுள் வேளாயுள்ளாய்" என்பது பழையவுரை.

இதனுள் ஓமகுண்டமென்பதனை யாகபாத்திரமெனவும், மதிலென்பதனைக் கோட்டையெனவும், துவராபதியென்னும் படைவீட்டைத் துவாரகாபுரியெனவும், பிறவும் மாறுபாடு செய்து எழுதியதற்குக் காரணமென்னை? மேலைச்சரிதப் பொருந்துதற்கென்பது தேற்றம். பிரும்மஸ்ரீ சாமிநாத ஐயரவர்களும் துவராபதி யென்பதற்குத் துவாரசமுத்திர மென்பர். துவராபதி யென்று மாத்திரமிருக்கில் ஓர்சார் துவாரசமுத்திர மெனலாம். துவராபதியென்னும் படைவீட்டையாண் டென்றிருக்கின்றமையின் துவார சமுத்திரமெனல் பொருந்துமோ.:

தடம் (ஓமகுண்டப்) - தடவு - ஓமகுண்டம். இதுகாறும் துவரையென்னும் படைவீட்டை வென்றுண்ட வேளிரின்மையின் நீயே அதனை வென்றுண்டு, உவராவீகை நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளாயிருக்கின்றாய் எனப்பொருள்படல் காண்க. இதனானே நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வெல்லற்கரிய துவரையை வென்றுண்டவன் நீயேயென்பது. ஏகாரம் தேற்றமும் பிரிநிலையும் ஒருங்குபயந்தது. இஃது முன்னிருந்த வேளிர்களெவரும் வெல்லாமையை விளக்கற்பாலது. வேளிருள் வேளென்பது புலவருட் புலவரென்பது போலும்.

செப்பு புணைந்தியற்றிய சேணெடும்புரிசைத் துவரையாண்டு என்றதனால் அது வெல்லற்கரிதென்பதும், வடபால் முனிவன் தட வினுட் டோன்றி யென்றதனால் அவன் திரையன்போலத் தெய்வத் தன்மையுடையானென்பதும், அதனால் அது வெல்லப்பட்டதென்ப தும், பிறவும் பெறப்படுமாறு காண்க.

செம்பு புணைந்தியற்றிய சேணெடும்புரிசை யென்பது புனைந்து ரையாகாது உண்மையெடுத்துக் கூறினமையின் தன்மையணியாம்.

ஈண்டு உவராவீகையென்பது வெட்சிபுட்கொடை.. அவை கற வையாகலின் உவராவெனப்பட்டது.

இத்துணையானே துவராபதியென்பது ஓர் அரும்பெரும் பாச றையென்பதே தேற்றம். "துவராவதிப் போந்து நிலங்கடந்த நெ டுமுடியண்ணல்வழி அரசர்பதினெண்மரையும் பதினெண்கோடி வே ளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டுபோந்து" என்ப துள் நிலங்கடந்தநெடுமுடியண்ணல், வேளிர், அருவாளர் —என்பவற் றிற் சொற்பொருளாற்றலுய்த்துணர்ந்துழி, அக்காலத்துத் துவராப தியென்பது பாசறை வழக்கென்பது போதரும்.

நிலங்கடந்த நெடுமுடியண்ணல் - மாற்றாரது நிலங்களைவென்ற அண்ணலென்பது.

வேளிர் - படையில் வல்லவரென்பது.

அருவாளர் - அரியவாட்போரில் வல்லவரென்பது.

காஞ்சிநகரில் ஸ்ரீமது இராமசுவாமிராஜா அவர்கள் நிலங்கடந்த நெடுமுடியண்ணலென்பதற்குக் கண்ணபிரானே பிறனொருவனோ எ ன்றயிர்த்து ஓர் சிறுசரிதம் எழுதினர். ஆசிரியர் வ-கணபதிபிள்ளை யவர்கள் கண்ணபிரான் அல்லன் அவன் ஓர் சார்வுபௌமன் என்ற னர்.

துவரைக்கோமான் துவரையின்கட் கோமானென விரியும். இவ ன் இடைச்சங்கத்து அறிஞருளொருவன். இத்துவரை கடல்கோள் பட்டது. பாண்டிநாட்டில் மிழலைக்கூற்றத்தின் பிரிவாகிய துவரா பதி நாடு இன்றுமுளதென்பர். அது ஈதெனற்கும் யூகமுளது.

(கக) "கொண்பெருங்கானத்துக் கிழவன்" இவன் கொண்கானங்கிழானென்னும் வேளாவன். கொண்கானமென்பது இக்காலத்து வழங்குங் கொங்கணநாடாகும். கொண்கானமென்பது கொங்கணமாயிற்று. இந்நாடு, பொம்பாய் இராஜதானியின் வடபாகம் தென்பாகம் என்னுமிரண்டுள்ளே வடபாகத்தைச் சேர்ந்துள்ளது. இதில் மலைகள் மிக்கிருத்தலின் புறநானூற்றில் மூன்றிடத்தும் கொண்பெருங்கானமென்பர். அறுபது காவதநீட்சியும் இரண்டுமூன்று வண்டில் செல்லத்தக்க அகற்சியும் உள்ள ஓர் சுரங்கம் இதன்கணுள்ளதெனவும், ஆங்கிலேயர் சிவாஜிமகாராஜாவைத் துரத்தியபோழ்து இச்சுரங்கத்தின் வழியாக அன்னோன் சென்றனனெனவும் கூறுவர். இவ்வரும்பெருஞ்சுரங்கமுள்ள கொங்கணத்தின்கண்ணே சிவாஜிமன்னவன் வாழ்ந்தமைபற்றி மபாடர்கள் அவணைத்துவராபதியென்பர்.

கண்டுத் துவாரமென்பது உட்டுளையாகலின் அது சுரங்கத்தை யுணர்த்திற்று.

"ஒன்றுநன் குடைய பிறர்குன்ற மென்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொலைஅத் துணைக் கிடப்பினுங் கிடக்கு மஃதான்று
நிறைஅருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே" (புறம்-கருசு)

கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது.

"திறுத்தற்கரிய படையையுடைய அரசரைத் திறைகொண்டு அவரை மீட்குந் தலைமையையுமுடைத்து" என்பதால் இடத்தினது அரும்போராற்றல் சிறந்துளதென்பது போதரும்.

அகத்தியனார் "கங்கையாருழைச் சென்று காவிரியாளை வாங்கிக்கொண்டு, துவராவதிப்போந்து" என்றமையானும், அதன்கண்ணே பதினெண்கோடி வேளிரிருப்புக் கூறுகின்றமையானும், நிலங்கடந்த நெடுமுடியண்ணலது துவராவதியும், இருங்கோவேளினது துவாரவதியும் இக்கொங்கணமென்றே கருதல்வேண்டும். இதிலுள்ள அரும்பெருஞ்சுரங்கமும், குடைந்துதோண்டிய கற்கோட்டைகளும், சி

வாஜிமன்னவனுக்கு முன்னமே நெடிதுகாலமாகவுள்ளனவென்பதும் அதற்கோர் சான்றாகின்றது.

ஈண்டு வழங்கும் பாஷை கொங்கணமெனவும் கொங்கணியெனவும் அது தமிழியையுடையதெனவும், அக்கற்கோட்டைகளிலுள்ள கல்வெட்டுகள் மிகப்பழையனவெனவும் அவையும் தமிழியையுடையனவெனவும் கூறுவதும்; நிலங்கடந்த நெடுமுடியண்ணல், வேளிர், அருவாளர்என்பவை தமிழ்ச்சொற்களாக இருப்பதும் உணரின், அகத்தியனார்க்குமுன் நெடிதுகாலமுதல் இந்நாள்வரையில் கொங்கணத்தில் தமிழ்வழக்கென்பது பெறப்படுகின்றது; தமிழ்வழக்கென்பது தமிழியையினை.

இனி கொண்கானமென்னுஞ் சொற்காரணம் ஆராய்தல்வேண்டும். கொங்கணம், கொங்கணி, கொங்கணவர் முதலியவற்றையுணரின் கொண்காணமென்பதே கொண்கானமென்றாயிற்றென்பது துணிபு. அது மலைநாடெனப்படலின் அக்காலத்துக் காணமென்பது மலைக்கொரு பெயரென்பது பெறப்படும். காணம் செக்குமாம். கல்லாற்செய்யப்பட்டதென்பது. இக்காலத்தும் கற்காணமென்பர். காணம் கொள்ளுமாம். குறிஞ்சிநிலத்தில் விளைவதென்பது. பின்னர்க் காணம் கானமாயிற்று. கானம் - மலை.

வேடனையுணர்த்துங் கானவனென்பதும், குறிஞ்சிநிலமாக்களையும் வேடரையுமுணர்த்துங் கானவர் என்பதும், குறிஞ்சிநிலத்தலைவனை யுணர்த்துங் கானகநாடனென்பதும், இக்காணமென்னுஞ் சொல்லினின்றே பிறந்தன.

கோணென்பது, கரகம் கெண்டிமுதலியவற்றின் மூக்கினையுணர்த்துகின்றமையானும், அம்மூக்கு உட்டுளை பெற்றிருத்தலினாலும், அக்கோணென்பது உட்டுளைக்கொரு பெயரென்பது பெறப்படும். கோணிப்பையையும் பன்றியையு முணர்த்துங் கோணி யென்பது, கோணென்னுஞ் சொல்லிற் பிறந்தது; உட்டுளையுடையது. உட்டுளைப்பது என்பது பொருள். இனி கோண்காணம் - கொண்காணம் என்றாயிற்றெனலாம். சுரங்கமுடையது, பிலமுடையது, கள்ளவழி

யுடையது, என்பது பொருள். என்னை ? சரங்கமுதலியன உட்டுளே யாகலின். துவராபதியென்பது பிற்காலத்து வழக்கு.

(கஉ) ஒய்சள யாதவர் முல்லைநிலத்து யாதவமரபினரே யெனல் பொருந்துமோ ?

ஓய்மான்நல்லியாதன், ஓய்மான்வில்லியாதன், சேரமான் கடுங்கோவாழியாதன், சேரமான் பெருஞ் சேரலாதன், நெடுவேளாதன் முதலியவற்றால், ஆதன் யாதனென்பன அக்காலத்து அரசமரபினர்க்குப் பட்டப்பெயராக இருந்த தென்பது புலனாகின்றது. ஆதனென்பது இலக்கணமுறைமையால் யாதனென்றாகும்.

செம்பூர்க்கோட்டத்துப் பிறையூர்நாட்டு வீரயாதவளவதிரையர் என்பதனால் தெளிக.

இவ்யாதனென்பது யாதவன் யாதவரெனத் திரிதல் அரிதாகமாட்டாது.

வேளாளர் மருதநிலத்தலைவர். இம்மருதநிலத்தலைவரினின்று, அரசராயினோர் சேர சோழ பாண்டியராகலின் அவ்யாதவர்களைக் கன்னடர் பேலாலர் எனக் கூறுவர் போலும்.

வேளிர்முதலிய சொற்காரணம் வருமாறு:—

வேல்;—

க—படைப்பொது—வெல்வது

உ—சூலம் — ,,

ங—கைவேல் — ,,

வேல்

வேள்:—

க—ஆண் மகன் — படையில் வல்லவன்

உ—சளுக்கியர் வேந்து ,,

ங—முருகன் — வேலில்வல்லவன்

வேள்புலம் — சாளுவம்

வேள்புலவரசர் — சாளுவர்

வேண்மார் — குறுநிலமன்னர்

வேளார் — ,,
வேழார் — ,,

வேள்

க—வேளிர் - குறுநிலமன்னர் படையில்வல்லவர்.
உ—வேள்வி - ஈகை; வேலினால் வென்று பாதீடு செய்வது.

வேல்.

வேலாண்மை - ஈகை, வீரம்.
வேலாளர் - வேளிர், வீரர்.
பேலாளர் ,, (கன்னடவழக்கு)
வெலமு ,, (தெலுங்கு)
வேளாண்மை :—

க ஈகை—பாதீடு.
உ வில்லேருழவு—உழிஞை.
ங உழவு.
ச பயிர்த்தொழில்.

வேளாளர்—ஈகையாளர், வேளிர்மரபோர், பயிரிடுவோர்.

கவர்கணைச் சுற்றங் கவர்ந்த கணநிரை
அவரவர் வினைவயின் அறிந்தீந் தன்று.
(வெட்சிப்படலம்—பாதீடு)

எண்ணார் பல்லெயில் கழுதையே ருழுவித்
துண்ணா வரகொடு கொள்வித் தின்று.
(உழிஞை—உழுதுவித்திடல்)

ஈண்டிய நிரை யொழிவின்றி
வேண்டியோர்க்கு விரும்பிவீ சின்று.
(வெட்சி—கொடை)

(கங) "ஒலியற் கண்ணிப் புலிகடிமால்"

அரசர்களுக்குப் புலிமுதலிய தீயவிலங்குகளை வேட்டையாடிக் கொன்று மன்னுயிர்களைக் காப்பது முறைமையாகலின் புலிகடிமாலென்றும் பொருந்தும். பெரும்பற்றினுற் புலிப்பாதன் பூசித்த வூர், பெரும்பற்றப் புலியூரெனவும், புலியூரெனவும் ஆயினாற்போலப் புலியூர்க்கோட்டத்தைக் கடிந்து வென்றமால் புலிகடிமால் எனவுமாம். ஆயின் இதற்குச் சரிதமின்று. இதனருகேயுள்ள புழற்கோட்டத்தில்

குறுநிலமன்னவர்களுக்கும் ஆதொண்டைச் சக்கிரவர்த்திக்கும் போர் நிகழ்ந்துள்ளது.

புலிகடிமாலென்பது வரலாறுகூறுந்து இவனுக்கொருபெயரென்றுழிதலின் இருங்கோவேள் ஊக்கம் வளர்த்தற்பொருட்டுப் பலமுறை வேட்டையில் புலிமுதலியவைகளைக் கடியுமியல்பினனெனவும் ஓர் குறிப்புப் பொருள் தோற்றலாகின்றது.

" தபங்கரென்னு முனிவரொருவர் தவஞ்செய்துகொண்டிருக்கும்போது ஒருபுலி அவர்மேற் பாயவர அதுகண்டு நடுங்கிய முனிவர் அப்போது காட்டில் வேட்டையாடிவந்த சளனென்னும் யாதவவரசனை நோக்கி இப்புலியைக் கொல் என்றேவ" என்பர் ஸ்ரீமத்ராகவையங்கார். யாண்டும் அகரவுயிர்போல் நிறைந்த பரமான்மாவை நோக்கி ஒருசிற்றவஞ் செய்யும்போழ்து, புலிமுதலிய தீயவிலங்குகள் அவர்மேற் பாய்வதெங்ஙனம்? அங்ஙனம் நேரிடினும் அதனைக் கொல் எனல் துறவறநெறி நின்றார்க்குச் சிறிதேனும் பொருந்துமோ?

" ஆனை துரக்கிலென் அம்பூடறுக்கிலென்
கானத்துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனைப்பதியினி லெம்பெருமான் வைத்த
ஞானத்தழவினை நானுழுவேனே." (திருமந்திரம்)

" கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.
உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற்குரு.
தன்னுயிர் நீப்பினுஞ்செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (உத்தரவேதம்)

இவ்வின்றியமையாக் காரணங்களால் அச்சரிதநிகழ்ச்சியைப் பற்றிப் பெரிதும் ஐயுறவாகின்றது.

(கச) " வேளெனவும் வேளாளரெனவும் பெயர்பெற்றதற்குக் காரணம் அவ்விருவரும் வேள்புலத்தினின்று வந்தமையேயாகுமென்பது தெளிவாயிற்றென்பர்" வேள்புலமென்பது இயற்கைப்புண

ர்ச்சியாகலின் வேளாண்டமையின்வேள் புலமாயிற்றெனல்வேண்டும். வெல்புலம் வேள்புலமாயிற்றெனலுமொக்கும்.

(௧௫) புலிகேசி வல்லபமுதலியன வீரரசத்தையும், யாதவர்க்குவழங்கும் வல்லபரென்பது தயாரசத்தையும் பயத்தலின் அவை பொருளனவாகா. வல்லவரென்பது வேய்ங்குழல் வல்லாரென்னும் பொருட்கண்ணும் வரும்.

(௧௬) ஆரிய பஞ்சசிகருடைய சுளுகத்தில் தோன்றினோ னொருவனுக்குச் சுளுக னெனல்பொருந்தும். இவரே சளுக்கரெனல்பொருந்துமோ? புறம்வேராது சலம்பற்றிப் பொருதல் அரசியல்பாகலின் சலகர் - சளுக்கர் - சளுக்கியர் சாளுக்கியர் எனல் சால்வும் பொருத்துடைத்து. சலம் - வீப்பு.

(௧௭) "புறநானூற்றில் முற்காலத்தே வடதேசத்து முனிவரொருவரது யாகபாத்திரத்தில் தோன்றியவர்" என்பர். புறநானூற்றுரையில் தாருண்டமென்றலின் அன்டு யாக பாத்திர மெனல் பொருந்தாது. அவை வேறு வேறு சரிதங்களாதல் வேண்டும்.

இன்னும் "வடபால் முனிவன் தடவினுட்டோன்றி என்பதற்குக் கதை யுரைப்பிற் பெருகும். அதுகேட்டுணர்க." என்று புறநானூற்றுரையில் கூறுவதை யுணரின் அது பெருஞ்சரித மெனத்தோற்றுவாநின்றது.

(௧௮) "தென்பாண்டிகுட்டங் குடங்கற்கா வேண்பூழி" என்பதன் வேணென்பது வேள்+நாடு=வேணாடு - வேண் எனவாயிற்றெனல் வேண்டா. வேளென்பதே வேணெனத்திரியும். பிறவுமாம்.

(௧௯) பாரதகாலம் கி. மு. ௧௩ - ௧௨—நூற்றாண்டென்பது பலர் கூறலின், ஸர்சார் ஒப்பக்கூடினும், இராமச்சந்திரமூர்த்தி இலக்குமணரை நோக்கி யயாதி யதுமுதலோர் சரிதையைச் சொன்னமையானும், யதுகுலத்தில் கண்ணபிரான் பிறந்தமையானும், இக்காலவரையறையில் ஐயுறவு நிகழ்கின்றது. நமது நாட்டில் காலவரையறையைப்பற்றிய உரையாட்டு இப்பொழுதுதான் தொடக்கமாகின்றது. இஃது இடைவீடின்றி வளர்ந்து முதிர்ச்சிபெறின் சிலசரித்திரக்கால்வரையறையின் உண்மை புலப்படும்.

"அறிதோறறியாமைகண்டற்றால்"

(உ०) கொண்கானங் கிழார். ஈண்டுக்கிழாரென்பது உரிமையுடையோரென்னும் பொருளில் வரும். அவ்வுரிமை காடுவெட்டி நிலந்திருத்தி நெடிது காலம் அனுபோகம் பெறுவதாலாவது. காணியென்பதும் அது. கிழமை - (உரிமை), கிழவன் (மருதநிலத்தலைவன்) கிழான், கிழார், சேக்கிழார், மனைக்கிழவன், மனைக்கிழத்தி. உரிமை பொருது வெல்வதாலாவதுமாம்.

(உக) உலகத்துள் இயற்கைநிலப்பாகுபாடாகிய குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தலென்பவற்றுள் முல்லையுமொன்றாகலின் அதனிடத்துள்ள மக்களே ஆயர், கோவலர் முதலியவர்களாக வேறுபட்டனர்.

வேய்ங்குழலிசை நிரம்பப் பெறலின் காடுடையுலகம் முல்லையெனப்பட்டது. முல்லை - இசை. அவையமுல்லை, மறமுல்லை முதலியவற்றால் தெளிக. மருதம், செயற்கை நிலப்பாகுபாடு. கார், கூதிர் முதலியன இயற்கைக் காலப்பாகுபாடு. விரிப்பிற் பெருகும்.

(உஉ) "வாடாச் சீர்த்தென்னன் தொல்லிசை நட்டகுடியொடு தோன்றிய நல்லினத்தாயர்" இதனால் ஆயர்கள் ஈண்டு வந்தவர்களெனலொண்ணாது. முல்லை மருதத்துப் புறமாகலின், அங்ஙனங்கூறினர். புறணி, புறம்பணை, புறவணி, புறவம், புறவு என்பன முல்லைநிலத்தின் பெயர். மருதத்தின் பக்கத்துள்ள தென்பதுபொருள். புடைச்சேரி - முல்லை நிலத்தூர். புடைச்சேரி முடைச்சேரி யாயிற்று. புடை - பக்கம். நல்லினத்தாயர் - முல்லை நிலத்தலைவர். பாண்டியர் - மருதநிலத்தலைவர்.

(உ௩) பாண்டிவமிசத்தவனொருவனிடமிருந்து தோன்றியவர் பாண்டவர் ஐவர் பாண்டியரெனில், அவ்வொருவன் யாவன்? விதந்து கூறாது பொதுப்படவொருவனென்றமையின் அதன் உண்மை பெறப்படவில்லை. பாண்டவர் சம்பந்தம் பெறலால் பாண்டியனெனவும் பஞ்சவர் சம்பந்தம் பெறலால் பஞ்சவனெனவும் ஓர்சார் பொருந்தும். அஃதும் கூடாவொழுக்கமென்பர். பொருந்தாது. சம்பந்தமாவது சித்திராங்கதையை மணந்தது. பாண்டவர் வமிசத்திற் பிறந்த

துண்மையாயின் பாண்டவனென்றாகாது பாண்டியனென்றாவதென்னை? பாண்டவர் பஞ்சவரென்பதற்கு உண்மைப்பொருள் அதுவேயோ? மூவேந்தருள், தமிழையே வளர்த்துத் தமிழிசையே செவியாரவுண்டு தமிழ்நாடன் எனப்பட்டோன் யாவன்? அவன் பாண்டியன் எனல் சாலவும் பொருத்துடைத்து.

பாண்டி - இசை. பாண்டி + அன் = பாண்டியன்.

"செழியன் தமிழ்நாடன் கூடற் கோமான்
தென்னவன் வழுதி மீனவன் பஞ்சவன்" (திவாகரம்)

இசையால், நோயாளிகள் நோய்நீங்கிநிற்றலும், பித்தேறினோர் நல்லறிவெய்தலும், அறிஞர்கள் மனமொருகிப் பரமான்மாவின் தெரிசனமடைதலும் உண்மையின் அதன்மேம்பாடு அளவிறந்தன; மற்றும் திருவிளையாடல் இசைவாதுவென்ற படலமுதலியவற்றால் தெளிக. இசைநேர்ச்சியுள்ளது தமிழ்மொழியொன்றேயென்பர்.

அன்னோன் குமரிச்சேர்ப்பன் ஆகலின், குமரிப்பாங்கவன் பஞ்சவனெனல் பொருந்தும்."

ககரம்சகரமாதல் இலக்கணமுறைமை. ஸ்ரீமது-சேஷகிரி சாஸ்திரியார், பண்டிதர்—சவரிராயப்பிள்ளையவர்கள் முதலோர் இம்முறை கூறுவர். இஃது தொன்று தொட்டது.

(உ௮) வேளாளர் முதலோர் ஆரியரது பாகுபாட்டினுள்ளே சேர்ந்தவராகார். தமிழரது பாகுபாட்டினுள்ளே சேர்ந்தவராவர்.

இதனானே நிலங்கடந்த நெடுமுடியண்ணலது துவராபதியும், கண்ணபிரான் துவராபதியும், வேறு வேறென்பதும்; நிலங்கடந்த நெடுமுடியண்ணல் கண்ணபிரான் அல்லனென்பதும், பிறவும் பெறப்படுமாறு காண்க.

இருங்கோவேளினது படைவீட்டைத் துவராபதியென்றலின் தோராபதியென்பது துவராபதியென்றாயிற்றெனல் ஒக்கும். தோரா - உட்டுளை. தோரப், தோராவாயிற்று. தைலிங்கர் உட்டுளையைத் தோரமு என்பர். துவாரமென்பது தோரமென்பதன்றிரிபு. தோரம் (துளை, வாயில்) தோரணம் - கோபுரவாயில் முதலியன. தோரணமாலை - வாயிலுக்கு நேர்படக்கட்டு மாலை.

மாகறல் ப. தி. கார்த்திகேய முதலியார்.

# நம்மாழ்வார்.

சில மாதங்கட்கு முன் "ஆழ்வாராதிகள் காலநிர்ணயம்" என்னுமோர் அரிய விஷயத்தை "Madras Review" (மெட்ராஸ் ரெவியு) என்னும்பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமாந்-து. அ. கோபிநாதராயரவர்கள் வெளியிட்டனர். அதில் சிற்சில காரணங்களைக்காட்டி நம்மாழ்வார் சற்றேறக்குறைய இற்றைக்கு 900 அல்லது 950 வருடங்கட்கு முற்பட்டவராயிருக்கலாமென்று ஊகித்தார். அக்காரணங்களுள் முக்கியமானது, அவர் "வரகுணமங்கை" என்னுந் திவ்விய தேசத்தைப்பாடியதைக் கொண்டு வரகுணன் என்னும் பாண்டியன் பெயரால் ஏற்பட்ட ஊரைப்பாடின ஆழ்வார் இப்பாண்டியனிருந்த காலமாகிய 850 [1] கி. பி-க்கு பிற்பட்டவராயிருக்கலாம் என்பதே. அதற்குச்சிலர், வரகுணபாண்டியனால் அவ்வூருக்குப் பெயர் ஏற்பட்டதென்பதைவிட, அவ்வரசனுக்கு அவ்வூர் நாச்சியாராகிய வரகுணமங்கையின்பெயர் கொடுத்திருக்கலா மென்று கொள்ளல் ஏலாதோவென்று ஆக்ஷேபித்தார்கள். வரகுணமங்கை, உத்தரகோசமங்கை, பட்டமங்கை, சிரீவரமங்கை, சாத்தமங்கை என்றாற்போன்ற ஊர்ப்பெயர்களில் காணும் "மங்கை" என்பது "மங்கலம்" என்னும் பதத்தின் சிதைவு என்பது பின் வருவதால் விளங்கும். அவ்வாறு இருப்பின் அவ்வூருக்குப் பெயர்கிடைத்தது அவ்வூர் நாச்சியாராகிய வரகுணமங்கையால் வந்ததன்று என்றும் அதன் பெயர் வரகுணன்மங்கலம் என்றிருக்கவேண்டுமென்றும் நிச்சயிக்கலாம். இது தவிர இன்னம் மற்றொருகாரணமுண்டு. மாறவர்மன் மகனாகிய ஜடிலவர்ம்ம பாண்டியனென்னும் முதல் மாறஞ்சடையனால் வேலங்குடி யென்னும் கிராமம் அதன் பழம்பெயர் நீக்கப்பட்டு ஸ்ரீவரமங்கலம் என்னும் புதுப்பெயரால் மகதப்பிராம்மணனாகிய ஸுஜ்ஜட பட்டனுக்குத் தானமாக அளிக்கப்பட்டதென்று பழையதான ஒரு தாமிரசாஸனத்தால் தெரியவருகிறது.[2] இவ்விஷயத்தைஅடியில்வரு

---

1 Christian College Magazine, April, 1905.

2 Indian Antiquary, Vol. XXII, p. 57.

மாறு வரைந்துள்ளது :— யக்ஞவித்தெய போடெஞ்சாத ஶாஸ்த்ரங்களைக் கரைகண்ட ஸஜ்ஜட்ஸட்டற்குத் தென்களவழிநாட்டு வேலங்குடியைப் பண்டைத் தன் பழம்பேர்நீக்கி ஸ்ரீவரமங்கலமெனப் பெயரிட்டுப் ப்ரஹ்மதேயமாகக் காராண்மையும் மீயாட்சியும் உள்ளடங்க ஸர்வபரிஹாரமாகந்நீரோடட்டிக்குடுக்கப்பட்டது." இச்சிரீவரமங்கலமே பிற்காலத்து சிரீவரமங்கை, வானமாமலை, தோதாத்திரி, நாங்குனேரி என்னும் பலபெயரால் விளங்கிநிற்குந் திவ்வியதேசம். இச்சாஸனத்துக் கூறியுள்ளானாகிய பாண்டியன் வரகுணன் காலத்திய மாறஞ்சடையனல்லன். அவனுக்கு முற்பட்டவனும், ஒருக்கால் அவன் பாட்டனுமாயிருக்கலாம். ஏனெனில் இவன் (முதல் மாறஞ்சடையன்) கலி-3871 (அதாவது கி-பி. 769—70) ல் இருந்தான் என்பது மதுரையின் பக்கத்துள்ள நாரசிங்கம் என்னுங்கிராமத்து ஆனைமலையிலிருக்கும் நரஸிம்மஸ்வாமி கோயில் சாஸனமொன்றால் தெரியவருகிறது.[1] இவ்விஷ்ணுக்கிரஹம் இவ்வரசன் காலத்து மேற்சொன்னவனாண்டில் குடையப்பட்டதென்பதை "கூலெஸஹஸ்ரத்ரதயெ ஸமொதெரமதெஷட்ஸப்தத்யாதிமெஸெ கலெவநதெளக்ருதவத்ரிதெஶா ஹரிவாநஹ ருத்ராதிதெஹஷ்டிவெளஷ்ணஹநிரோஸிகாதிருகெ" என்று மேற்குறித்த சாஸனத்தின் பகுதியால் நன்கு விளங்கும். இச்சாஸனத்து முதல்மாறஞ்சடையன் பரமவைஷ்ணவனென்றும், காஞ்சிவாய்ப் பேரூர் என்னுமிடத்து "திருமாலுக்கமர்ந் துறையக் குன்றமன்னதோர்கோ இலாக்கிஉம்" போந்தானென்பதும் முன்சொன்ன தாமிரசாஸனத்தால் உணரப்படுகின்றன.

இம்மாறஞ்சடையனால் ஸ்ரீவரமங்கலமென்னுபெயரிடப்பட்டுத் தானமாகக் கொடுக்கப்பட்டகிராமம் சிரீவரமங்கை என்று பெயர் மருவுதற்கும், இதற்குமேலெல்லையாகக் கூறப்பட்டுள்ளதும் நம்மாழ்வாரால் திருக்குறுங்குடி என்னும்பெயரால் மங்களாசாஸனஞ் செய்யப்பெற்றதுமாகிய குரங்குடி[2] என்பது திருக்குறுங்குடி எனவிவர்

1. இச்சாஸனமும் மற்றொன்றும் (Epigraphia Indica) வில் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

2 மேற்சொன்ன தாமிரசாஸனத்தைப் பார்க்க.

காலத்து மருவியதற்கும் இடையில் ஏதேனும் சிலகாலஞ்சென்றிருக்க வேண்டுமென்பது திண்ணம். ஆதலால் இச்சிரீவரமங்கையையும் பாடிய நம்மாழ்வார் இம்முதல் மாறஞ்சடையனுக்கு சுமார் ஒரு நூற்றாண்டாகிலும் பிற்பட்டவராதல் வேண்டும்.

பின்னையும் வரகுணமங்கையைப் பாடியிருத்தலின் வரகுணன் காலமாகிய கி. பி. 9-ம் நூற்றாண்டின் முதற்பாதிக்கும் பிற்பட்டவராவார் என்பது வெளிப்படையா யறியலாம். ஆதலின், இவ்வாழ்வார், ஸ்ரீமாந்-ராயரவர்கள் நாட்டியவாறு, கி. பி. 950 அல்லது 1000-வது வருஷங்களுக்குச் சமகாலத்திருந்தவரா யிருத்தற்கு விரோதமொன்றுங் காணேம். இன்னம் நாளடைவிலே பிற சமாசாரங்கள் கிடைத்து ராயரவர்கள் சித்தாந்தம் குலையுமளவும் அதை ஏற்பதில் தடையொன்றுமில்லை.

கோ. வெங்கோபராவு,
அஸிஸ்டெண்டு எபிகிராபிஸ்ட்,
உதகமண்டலம்.

---

## திருக்கோவலூர்

# இராஜராஜன் சாஸனம்.

திருக்கோவலூரின் மேற்கே அரை மைல் தூரத்தில் கீழூரென்று இப்பொழுது பெயர் கூறப்படும் கிராமத்தில் கோவல்வீரட்டானேசுவரர் கோயிலிருக்கிறது. அக்கோயிலின் கர்ப்பக்கிரகம் மிகக் கருத்த கெட்டிக் கருங்கல்லால் (trap rock) வெகு அழகாய்க் கட்டப்பட்டிருக்கிறது. இக்கர்ப்பக்கிரகத்தில் ஏறக்குறைய நூறு பழைமையான சாஸனங்கள் உள. அவற்றில் அடியில் எழுதியுள்ளது ஓர் அழகான அகவலாதலால் தமிழபிமானிகளுக்குபயோகப்படும் பொருட்டுப் பதிக்கமுயன்றேன். இது வீரட்டானேசுரர் கோயில் கர்ப்பக்கிரகத்தின் தெற்கு, கிழக்கு, வடக்கு குமுதப்படையில் ஆறு வரிகளில் எழுதியிருக்கிறது. ஆரம்பத்தில் கொஞ்ச பாகம் உடைந்துவிட்டதோடும், சிற்சிலவிடங்களில் சிறுசிறு மண்டபங்கள் கட்ட

ப்பட்டிருந்ததால் அவ்வவ்விடங்களில் சில பாகங்கள் கிடைக்காமற் போய் விட்டன.

இச்சாஸனம் சோழவரசனாகிய முதல் இராஜராஜன் காலத்தியது. முதல்வரியில் இவ்வரசன்பெருமையை எடுத்துக்கூறியிருக்கிறது. இவ்வரசன் பாண்டியரை "வரைபுகத்துரத்தியும், கலிங்கத்தை ஜயித்தும், கங்கபாடியைக் கைக்கொண்டு கொங்கவரசனை வெளிப்படுத்தியும், சேரனை மலைநாட்டு போக விடுத்தும், உதகையை அழித்தும் புலிக்கொடியை எங்கு நாட்டினான்" என்று விளங்குகிறது. இவ்வரசனை மஹீபதி, நரபதி, அசுவபதி, கஜபதி என்றும், இந்திர சமானன், ராஜஸர்வஞ்ஞனென்றும் புகழ்ந்திருக்கிறது. இவ்வரசன்மனைவி ஓர்சேரன் மகளாம். இரண்டாம் மூன்றும் வரிகளில் திருவீரட்டானத்து வர்ணனையும் பெண்ணையின் பொலிவையும் வெகு அழகாகச் செய்திருக்கிறது.

மற்றவரிகளில் இச்சோழவரசனுக் கதிகாரியாகிய அம்பர்நாடன் ஆலங்குடிக்கோன் வீதிவிடங்கன் விறற்கம்பன் கொடுத்த கிராமங்களையும் அவற்றில் வரும் பெரும்படியின் விநியோகத்தையும் குறிக்கிறது. ஆலஞ்செறு, உணாங்கல் பூண்டி, ஆவியூர் என்னுமூர்கள் திருக்கோவலூர் தாலூக்காவிலே இருக்கின்றன.

இச்சாஸனத்திறுதியில் மூன்றுபாட்டுக்களுள. அவற்றுளிரண்டுவெண்பாக்களும், மூன்றுவது.............வுமாம். முதலது இக்கம்பனால் திருவீரட்டானேசுரர்க்கு பொற்பூக்கள் சில கொடுக்கப்பட்டனவென்று கூறுகிறது. இரண்டாவது இவனே ஒருமணிப்பட்டம் ஈந்தான் என்று தெரிவிக்கிறது. மூன்றுவது கடைசியில் சில வெழுத்துக்கள் போயிருப்பதால் முடிவுபெறவில்லை. இதில் இவனே ஒரு வெள்ளிப்பீடங் கொடுத்தானென்று சொல்லுகிறது. இதில் அரசனாட்சியின் ஆண்டு 27 என்று கூறுகிறது.

## சாஸனம்.

திருக்கோவலூர் திருவீரட்டானேசுவரர்கோயில் கர்ப்பக்கிரகத்தின் தெற்கு, கிழக்கு, வடக்குக்குமுதப்படையில் வெட்டியுள்ளது.

1...கற் கங்குற், குழம்புபட பேரிருட் பழம்புபட வுருட்டிய, செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன், வழிமுதல் வந்த மஹிபதி வழிமுத, லதிபதி நரபதி அஸ்வ......[ட] கஜபதி கடலிடங் காவலன், மதிமுதல் வழுதியர் வரைபுக மற்றவர், தேவிய ரழுதுய ரழுங்கவி லழுங்கிப், பொழுதியல் வஞ்சியிற் காஞ்சி வகுத்து,.....சஞ்சிலைக் கலிங்கன் தனமெ.கப்ப.....ணைந்து நொதுமா, கங்க பாடிக் கவ்விக் கொங்கம், வெளிபடுத் தருளி யளிபடுத் திருளிய, சாரல் மலையிட்டுஞ் சேரன்மலை ஞாட்டுத், தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத், துடர்நெய்க் கனகந் துகளெழ நெடுநற், கோபுரங் கோவை குலையமாபெரும், புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச், சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை, யுதைகைமுன் னெள்ளெரி கொளுவி யுதைகை, வேந்தைக் கடல்புக வெகுண்டு போந்து, சூழ்மண் டலந்தொழ வீழ்மண் டலமுங், கொண்டு தண்...ட் டருளிப் பண்டு, தங்கடிருக் குலத்தோர் தடவரை யெழுதிய, பொங்குபுலிப் போத்துப் புதுக்கத் துங்கத், திக்கின் றசேனை செலுத்தி மிக்க, வொற்றைவெண் குடைக்கீ ழிரட்டைவெண் சவரி, தெற்றியவனிலந் திவள வெற்றியுள், வீற்றிருந் தருளிய வேந்தன் பொற்றிருந், தண்டமிழ் நாடன் சண்டப ராக்கிரமன், திண்டிறற் கண்டன் செம்பியர் பெருமான், செந்திரு மடந்தைமன் ஸ்ரீராஜ ராஜ, னிந்திர ஸமானன் ராஜஸவ—ஞ்ஞனெனும், புலியைப் பயந்த பொன்மான் கலியைக், கரந்து காவாக் காரிகை சுரந்த, முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந், தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந், தூண்டா விளக்கு—

2...........தரான், திருப்புய முயங்குந் தேவி விருப்புடன், வந்துதித் தருளிய மலையர் திருக்குலத்தோ, ரன்மை யாகதமாகத் தொன்மையிற், குலதெய்வ..... ..........கொண்டது நலமிகுங், கவசந் தொடுத்த கவின்கொளக் கதிர்நுதித், துவசந் தொடுத்த சுதைமதிற் சூழக, மப்புள கம்புத வக...க் கோபுர, வாயின் மாட மாளிகை வீதித்தே, ........லுழி குணக்கு காலபமுங்கக், காளா கருவுங் கமழ்சந் தனமுந், தாளாந் திரளச் சாளமு நீளார், குறிஞ்சியுங் சோகுடியு முகடுயர் குன்றிற், பரிந்துடன் வீழப் பாய்ந்து செறிந்துயர், புதுமத கிடறிப் பொரக்கலிங் கிடந்து, மொர்து மொதுமுத் திரைவிலகிக்கதுமென, வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத், தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது, மெய்வைத் தியலு முத்தமிழ் கபிலன், மூரிவண் டடக்கைப் பாரித னடைக்கலப், பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை, யலைபுன லழுவத் தந்தரி க்ஷஞ்செல, மினல்புகும் விடுபே றெண்ணிக், கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர், பேரெட் டான வீரட் டான, மனைத்தினு மறுதி யாயது நினைப்பினு, முணர்தற் கரியது யோகக ளுள்ளது, புணர்தற் கினியது பொய்கைக் கரையது, சந்தன வனத்தது சண்பகக் கானது,

நந்த வனத்தி னடுவது பந்தற், சுரும்படை வெண்பூங் கரும்பிடைதுணித்த்தாத், தாட்டொலி யாலை யயலது பாட்டொலிக், சருங்கைக் கடையா பெருங்கைக் கடைவாள், பசுந்தாட்டியுஞ் செந்நெற் பழனத் தசும்பார்—

3........ன்மைப் பெருந்திரு வுடையது, பாடகச் சீறடிப் பணைமுலைப் பாவையர், நாடகத் தழுதி நவின்றது சேடகச், சண்டையுங் கண்டையுந் தாளமுங் களமுங், கொண்டதிர் படகமுங் குளிறுமத் தளங்களுங், காடிகைத் தொகுதியுங் கைம்மணிப் பகுதியு,........வீதிருப்பலி சிறந்து விருப்பொலிப், பத்தர்தம் பாடல் பயின்றது முத்தமிழ், நாவலர் நாற்கவி நவின்றது வேலி, லருவைநெ யாடையுறை வெனைக்குனித் தடிமைசெய், பருவையர் வெறுவிதம் பயின்றது சுரமடுமுக், கண்ணவ னுறைவது கடவுளர் க்குறைவது, மன்னவர் தொழுவது வானவர் மகிழ்வது, மற்றுமின்ன வளங் கொள்மதிற் பகாதைத், தெற்றுங் கொழுநூற் சிவபுரத் தாற்குப், பந்நாணிலைபெற முந்நாளுந ரவோன், செய்த தானந் தேவன் குடியி, லலகியல் மரபி னமைந்து வலகியல், சாண்பந்நி ரண்டிற் சமைந்த தனிக்கோல், பொற்றுற வளந்த முற்றறு பதுகுழி, யாவொன் றாக வந்த வேலி, யாறே காலிலந்தங் கலந்து, நீங்கிய லைத்தா னிங்கா நெற்றுகை, ஆங்கொரு மாவிற் கறுக லயாகக், கொழுநூற் றுய நாடுங் கூட்டி யளந்த, எழுநூற் றிருபதி லிறை யகற் குரிமை, நாழி யெட்டான வாழி யட்டானக், கருங்கா லொன் றூற் செங்கை யிரண்டிட், டளந்த நெல்லை றறுபதினிற் கலந்த, நிவந்தத் தன்மை யிளையி லுவந்து, மஞ்சுகண் டமருங் கமுதுண வயந்த, வொத்தெண் வழுவாப் பத்தெண் குத்தல், பழநெல் லரிசி பன்னிரு நாழிக்குப், பதினையிரட்டிநெற் பதினை யிரட்டியுங், குறுவாளாள செங்வா ணயினிக், கோரிரு நாழி யுளப்படுத் துயர்ந்த, நெல்நா லெட்டான நாழியு—

4...ககாங், கறுநா ழியுமடைக் காயமி திற்கு, பக்க ருழக்கும் பரசாயக மாணன், முன்கி லுக்கு நெல்லறு நாழியுந், திருமடைப் பள்ளிப் பெருமடைக் குதவு, மிந்துவ வொருவற்குத் தங்குமுன் னுழியும், ஆகநெற் கலமு மேகநற் றிவசம், அப்பரி சியற்றலி யறுவகை யிருதுவு, மி.................இனை புஞ்சு பொட்டுக், கல்லைக் கவர மூன்று மாவு, ஆலஞ் செறுவி லஞ்சு மாவும், திரண்டு மாய்புனற் றெங்காச் செறுவி, லிரண்டு மாவும் இலுப்பைக்கா லிரண்டும், நெல்லா லித்தெழும் புல்லா லிப்புர, மஞ்சொடுங் கூட்டி ஆகிய நிலத் தொகை, அப்பத் திரண்டி லமர்முப் பத்திரண்டு, மேலா றுணர்ந்த நாலாறெண் பயி, லந்தண ரனைவர்க்கு மரிஞ்சறு லுரகந், தந்த பின்னைத் தடமலர்ப் பொய்கைப், பொதகர பழனப் புதுமலர்ச் சோலைச், சிதரரிப்பலமஞ்சு மெஞ்சாமற், செட்டதிரு வையன் கொட்டமில் குணத்தாற், செம்பொற்

புரிசைச் சிவபுரத் தாற்குக், கொவலந் தணர்பாற் கொண்டு கொடுத்தன, பண்டைக் கொலாற் பண்டைக் குழித்தொகை, மணங்கொண் டிண்டு முணங்கல் பூண்டி, யொப்புத் தொறுமா முப்பத்—றுமாயுமிக, வநதுயர புறைபக வநதக் கழனி, யெட்டு முதலிருபது மாவு மட்டவிழ், பூத்துழா வி யபுனல் மாத்து பூான்வெலி, ஏலிய வெட்டு மாவும் வாவியிற், கொடெறு பழனக் காடெறு மாநல, மஞ்சுங் களாக்கம் பத்து நெஞ்சத், துள்ளித் தகும் புன லூரவுக் கூடலூ, காயம பளத்திரண்டும் யாவருங் களியக், கழனியி லெட்டுங் கைகலந்துரைப் பற்று—

5…[வி] ளர்சடை யொன், பெற்ற வாரம் பிழையறப் பேசி, லைம்பதிற் றைஞ்சொடு மொயம்புற பதினெரு, கலத்தொடு முணங்கல் பூண்டியிற் க றைனெலை, நன்செய் நீக்கிப் புன்சை நான்மா, மாத்தாற் கலவரை யான வரை யறை, அறுகல மெற்றிப் பெறுகல வளவை, முன்னெடு மு……… ணிறத் தன்மைத்தா ற்சகுத்த, வரிசியி லான நெல்லு வரிசையிற், குறுபவன் கூலி யெற்றுப் பெறுவன, பெணிய பழநெற் றுணியுங் காணிய, வையமிது புகழு நெய் யமுது முப்பிடி, கொள்ளக் கொடுத்த நெல்லறு நாழியும், பொழுது மூன்றினுக் கிமு…………துவ…செந்தயி, ரொருமுன் றுழிக்கிருமுன் று ழியு, மடைக்கா யமுதுக் காறுரி யத்து, மந்தண னெருவ னபிடைகஞ் செய் யத, தந்தன குறுணிமுற் றலைதந்தநா ழியு, மறையவ செய் மாணிாண்டி னுக்குக், குறைவறக் குத்தநெற் குறுணிநா னுழியு, மொபாண் டினுக்கு நெ ராண் டாக, நண்ணிய நக்ஷத்திர மென நல்லோ, ரெண்ணிய திருவிளக் கெ ண்பதுங் கண்ணைக், காவிவா கயல்வய லாவியூர் தனிற், றிக்குடை யிவரு முக்குடை யவர்தம், அறப்புற மான நிறப்பட நீக்கிச், சாலி விளைநிலம் வெ லி யாக்கி, முதல்வதின் மூன்றெ முக்காலெ யரைக்கா, லிதன் தனி வந்தமி யல்வகை யுரைப்பில், ஒப்புத் திருவனையவர் முப்பத் திருவர், பாடல் பயின் ற நாடகம் களிற்கும், நெஞ்சா சார நிறைவொடு குறையாப், பஞ்சா சாரியப் பகுதி யோற்கும், நறைப்பு துமலர் விரிந்த வான, மிறைப்புத் தொழில்புரி ந்த விருந்தவத் தோர்க்கும், யொகி யொருவனுக்கு மோகமுலை—

ப்…………னற்றத் துவநெறியி, லறங்கள் யாவையு மிறங்கா வண்ணம், விஞ்ஞா பனத்தால் விகவெளிப் படுத்தொன், அன்பது வெலியி லடைகுன்ற காக்கு, மொன்பது வெலி புடைய வுரவொன், கொம்பர் நாடுங் குளர்மலர் சொலை, யம்பர் நாடன் ஆலங்குடிக் கோன், தெண்டிரைப் பழனத்தி……… மைக்கற் பகத்துடன், போாண் டலைப் புணர்புயத் துரவோன், கூத் தொழில் கெளா தெத்தொழில் முனைந்த, கண்டகர் காிசறத் தாிசற் கலி செக, மண்டல சுகதியில் வயப்புலி வளர்த்தொன், வான்பால் மதியும் வலம்

புரி யிடம்புரி, மான்பால வதிலா மவிர்சடைக் கடவுள், நெற்றிக் கண்ணும் நிலத்தவர் நினைந்த, நெற்றிக் கண்ணுஞ் சிந்தா மணியும், பொலப் பிறந்த புகழொன்று கொலக், கருங்களிற் றுழவன் கம்பத் தடிகள, மாதி விடங்கு வருபரி வல்ல, வீதி விடங்கன் மென்கருப் பாலைத், தலந்தரு தண்டலைத் தடநீர், நலந்தரு பொன்னி நாடுகிழ வோனே || —

|| —வெலியர்கொன் வீதி விடங்கன் விறற்கம்ப
னுலியலமான் சொழ னதிகாரி—கொலப்
படியின்மேற் பொற்பூப்பைங் கோவல்வீ ரட்டர்
முடியின்மெல் வைத்தான் முயன்று.

பொன்முக் கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைந்த மேற்கட்டி—சொன்மிக்க
கோவலான் வீரட்டற் கிந்தான் குலவெலி
காவலான் வாழ்கம்பன் கண்டு || —

சென்னிதிறற் ஸ்ரீராஜ ராஜற்கியாண்டு திகழுமிரு பத்தெழிற் செழுநீர்வெலி மன்னிய கம்பன் மஹிமாலைய் மூவேந்த வெளான் விண்ணப்பத்தால் மணி [ஸ்ரீறகோவல்
வென்னி யசிர் வீரட்டத்தி லிங்கமொன்று பொன்னூ—றய்த்தற்கு வெள் [ளிப்பீடம்
பன்னிய ... ... ... ... ... ..

து. அ. கோபிநாதராவு.
திருவல்லிக்கேணி.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

(தொடர்ச்சி).

## மநுநீதிகண்ட புராணம்.

(க) வன்னி - வன்னிமரப்பத்திரம்.

(உ) சாளரங்களையுடையநெடியசபை.

(ரு) குறிக்கப்பட்ட நாயகர்களில்லாத உருத்திரகணிகையர்களுடைய மாளிகைகளுள் ஒன்று சிவபெருமானுடைய வாமபாகத்திருக்கின்ற உமையின் தாதியாகிய பரவையார் அவதாரஞ்செய்த மாளிகையாதலின், அத்திருவாரூரின் விசேஷத்தைக் கூறுதற்கு அளவு என்னை? அளவுஎன் என்பதற்கு எண்ணவிலாகுமோ எனினுமமையும்.

(சு) விளக்கமிகுந்த ஆபரணங்கள் பொருந்துதலானும், அசைவற்ற பேரொலியானும், நெருங்கிய பலபண்டங்கள் வளத்தோடு பலவழியாக வந்து நிறைதலானும்; கடற்கேற்பக் கூறுங்கால், கலன் மரக்கலமும், ஆறு நதியுமெனக.

(கO) சிறணங்கிய - சிறந்த அழகையுடைய.

(கக) (ந - ம் வரி) கிரகஸ்தர்கள்.

(கரு) நிபந்தம் - கட்டளை.

(கசு) மநுச்சக்கரவர்த்தி பெற்ற நீதியுந் தன்பெயராக்கினான் என்னும்பெயர் மநுநீதிகண்டசோழனென்பது.

(கஅ) சிவமுயன்று - சிவத்தை முயன்று. பவமுயன்றதுவும்-பிறவியெடுத்ததுவும்.

(உக) வெற்றியையுடைய அரசிளங்குமரன் போகின்ற அழகிய ரத்தினங்கள் அழுத்திய மாளிகைகளையுடைய வீதியானது, ஒருபால் புகழ்கின்ற மங்கலப்பாட்டுகளுக்கு முன்னாகப் பாணர்களையும், நின்றேத்துவார்களையும், மற்றொருபால் வாசனை பொருந்திய நறிய கூந்தலையுடைய மகளிர் வீழவிடுகின்ற சங்கவளையல்களையும், மற்றொருபால் மேன்மையையுடைய முரசோடு சங்கங்களாரவாரிக்கின்ற முழங்கொலியையும் பொருந்தும்.

(உஉ) ஒப்பற்ற பெரியதருமமானது தானொருதயையுமின்றி அரசனது நீதியினின்றும் அநீதியிற்சாயாத மனத்திலுள்ள உண்மைத்தன்மையைச் சோதித்தாற்போல, அக்கூட்டத்துள்ளமனிதர்கள் கன்றாகிய தன்னுடைய வரவை ஒரு சிறிதுங்காணாதபிரகாரம் ஓர் ஈன்றணிய பசுவினது இளங்கன்றானது துள்ளி அவ்வீதியினூடே போயது; என்னப்போந்தது எனமுடிக்க. சோதித்தாலென்னத் தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலத்தாற் கூறப்பட்டது.

(உ௩) அப்பசுக்கன்றானது ஓர் அபாயத்தால் நடுவிற்போய்த் தேருருளை தன்மீது வேகத்தோடு உருளப்பட்டு இறக்க; அப்புனிற்றாவின்கன்று என நிற்கற்பாலது எதுகைநோக்கி அம்புனிற்றாவின்கன்று என மெலிந்துநின்றது. ஆம் அழுகெனினுமமையும்.

(உ௫) அரசனுக்கிந்தப் பழிவந்தெய்தத் தமியேன் பிறந்தவாறென்னையோ என்பான்.

(உ௯) பழியைப் புலப்படுத்தும் பறை அரசனுக்குப் பிற்சந்ததியைத்தருமமாகிய புதல்வனது ஆன்மாவைக் கவரவருகின்ற இயமனுடைய வாகனமாகிய எருமைக்கடாவின் கழுத்திலணிந்த மணியொலியோ என்று கேட்டோர் எண்ண, தன்னுடையவாயிலில் முன்னோர்காலத்துங்கேளாத உரத்தெழுமோசையானது மன்னனது செவியாகிய புலத்தினுளடைந்தபோது; என்ன எழுமோசை, கடைமுன் கேளாவோசை, தெழித்தெழுமோசை எனத் தனித்தனி முடிக்க.

(௩0) அறிந்துளாராகிய முதிர்ந்த கல்வியையுடைய பழைய மந்திரிகளின் வழியையறிந்த அமைச்சன்.

(௩உ) சூழல்வான், தெளிவான் பின்பு சூழுதல் தெளிதலென்னுமிவ்விரண்டையும் பொருந்துதலாற் றெளியானென்க.

(௩௪) மைந்தனை நிறுத்தலறமென்றாரெனக் கூட்டுக.

(௩௫) வலிப்பாட்டு - வல்வினையாகிய அபாயத்தைப் பொருந்தி; வலாற்காரப்பட்டென்றுமாம். சழக்கு - பொய்.

(௩௭) (௩-ம் வரி) உயிரென்றது விலங்குசாதிகளை.

(௩௭) மனுநூற்றுறை - மனுவாற் றனது நூலிலே தொடுக்கப்பட்ட விதிவிலக்கு. மனுநீதிகண்ட சோழராகிய தாம். இதுவே மந்திரிகள் வழக்கென்றார் என்றது அரசர் மகிழுமாறு கூறுதலே அவர் வழக்கமாதலினென்க.

(௩௯) நெறிநின்றவுலகமென மாறுக.

(௪0) அவ்வுரையென்றது, வேதவாக்கை.

(௪௧) புரந்தரனை முன்வைத்துக் கூறியது, ஏனைத்தேவரினும் இத்தலத்தே விசேடமாகப் பூசைமுதலியன செய்தவனாகலின். அநகன் - பாபமில்லாதவன். இதுவே யென்றது கொல்லுதலே. இந்நூலாசிரியரும், அரசன்கண்ணேகபுத்திரனைத்தேர்க்காலின்கீழ் வைத்துநெரித்துக்கொல்ல நிச்சயித்தான் என்பதை வெளிப்படக்கூற நாவெழாமையால் அரும்பொருடுணிந்தானென வேறோர் வாய்பாட்டாற் கூறினார்.

(௪௨) மைந்தன் மருமமானது தேராழியிற் பொருந்த வூர்ந்தான். மற்று வினைமாற்று.

(௪௫) கண்மழை - கண்ணீர். அண்ணலவன் - அவ்வரசன். விடங்கப்பெருமான் - உளியினாற் செய்யப்படாத எம்பெருமானாகிய தியாகராஜசுவாமி. டங்கம் - உளி. வி - இன்மை. சுயம்புமூர்த்தியென்பது கருத்து.

(௪௬) தனிவிழிக்குந் திருநுதலும் - தனிமையாயுள்ள இமையாதகண்ணையுடைய திருநுதலும். எம்மருங்கும் - எவ்விடங்களிலும்.

(௪௭) தானித்தன்மையறானென்பதைத்தானுமறிந்திலன்.

(௪௮) உண்டுபடிநனைய - உண்டு வீஞ்சுதலாற்பூமிநனைய.

(௪௯) பூங்கோயில் - திருவாரூர்ச்சிவாலயத்தின் பெயர். எழுலகுங் கண்டெடுத்தேத்து மெனக்கூட்டுக.

(௫0) இந்தப்பிரகாரந் தருமவழியினின்ற அளவிறந்தோருக்குக் கிருபை புரிந்து அச்சிவபெருமான் மகிழ்ந்தருளப் பெற்ற திருவாரூரின்மீது அலங்கரித்துக் கூறும் வசனமானது நம்மளவிற்

கூறலாந்தகைமையினையுடையதோ, அது நிற்க. அத்திருவாரூருக்கு அறவனார் பூங்கோயில் இருதயகமலமாம்; அகவிதழாம்; எனவே, அத்திருவாரூரை ஒரு தாமரை மலராக உருவகிக்க.

## திருக்கூட்டச்சிறப்பு.

(௧) பூங்கோயிலின் முன்றிலைச்சூழ்ந்த மதிலின்றிருவாயிலின் முன்னுள்ளது தேவாசிரய மென்னும் திவ்யமண்டப மென்க.

(௪) அதனிடை - அதனிடம்.

(௫) சிவபெருமானால் விரும்பிமுன்னைப்பட்டவர்.

(௯) காதலுறைப்பு - அன்பினதுறைப்பு.

(அ) ஆக்கக்கேடுகள்கெட்ட அருட்செல்வத்தையுடையவர்கள்.

(௯) ஆரம் - மாலை. பாரம் - உரிமை, கடமை.

(௧0) தாமவிரும்பியபடி ஏனையோருமவிருப்பமிருந்த தவவேடத்தையுடையவர்.

(௧௧) மயபிரானாகிய ஆலாலசுந்தரர் வந்துபாடியதன்மையை கூறுவாம்.

---

## தடுத்தாட்கொண்ட புராணம்.

(௧) ஆண்டவர் - சுந்தரமூர்த்திநாயனார்.

(௨) மறைச்சைவம் - வைதிகசைவம். அவதரித்த - சுந்தரமூர்த்திநாயனாரவதரித்த. வளம்பதி - வளமபதியானது. நாடுதன்னிற்பதி, அவதரித்தபதி, தவததான்மிக்கபதி, வளமபதி எனத்தனித்தனிகூட்டுக.

(௩) சடையனாருக்கென்னுநான்கனுருபுமனையென்னும்பெயர்கொண்டது. அவதாரம் - இறங்கல்

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை,
“ நாகைநீலலோசனி ” ப்பத்திராதிபர்.

# புத்தகக் குறிப்பு.

ஸ்ரீமத் பகவத்கீதை-ஸ்ரீ சங்கரபாஷ்யம்:—உலகங் கொண்டாடும் ஞானசாஸ்திரமாகிய கீதையின் பழைய பாஷ்யங்களுள் முற்பட்டதான ஸ்ரீ சங்கராசாரிய பாஷ்யமானது, ஏனைய் மொழிகளிற் பெயர்க்கப்பட்டிருக்க, நம்மவர்க்கு உபயோகமாக அதனைத்தமிழில் மொழிபெயர்க்க முன்வந்தார் இதுவரை இலர். முன்னர்ச் சிலர் பலரால் கீதைக்குத் தமிழுரை இயற்றப்பட்டு வெளிவந்திருப்பினும், அவை, பழையபாஷ்யகர்த்தாது கருத்துக்கள் முழுதையும் உள்ளதுள்ளவாறு காட்டாது சுருக்கியும் குறைத்தும் போந்தன. இக்குறைநீங்க ஸ்ரீ சங்கர பாஷ்யத்தை, முதனூலிலுள்ளபடியே, இனிமையும் எண்மையுமாகிய தமிழ் நடையில், இப்போது வெளியிட முற்பட்டிருத்தல் பலர்க்கும் மகிழ்ச்சி விளைக்கத் தக்கது. இதன் முதற் சஞ்சிகை, அதன் மொழிபெயர்ப்பாளராகிய ப்ரஹ்ம ஸ்ரீ: த. சுந்தரராஜசர்மா அவர்களால் எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனைப்படித்துவரும்போது, உரையாசிரியரது ஆழ்ந்த கருத்துக்களெல்லாம் விசதமாகும்படி மொழிபெயர்க்கு மாற்றல், சர்மா அவர்கட்கு மிகுதியுமுண்டென்று தெளிவாகின்றது. வடமொழிவல்லுநரான சர்மாஅவர்கள், தம்மொழிபெயர்ப்பில் தமிழ்மொழியை ஆளுமுறைமை,மொழிபெயர்ப்பாளர்க்கு ஒருமுன்மாதிரியாகுமென்னலாம். இந்நூலில், இன்றியமையாத இடங்கட்கெல்லாம் கீழ்க்குறிப்பு வரையப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் வித்துவசிரோமணிகளால் வெளியிடப்பட்ட கருத்துவகைகளும் ஆங்காங்குக் காட்டப்பட்டிருக்கின்றன. சுருங்கச் சொல்லின், இது போன்றவையே, "மொழிபெயர்ப்புநூல்" என்று அறிஞர் மதிக்கத்தக்கனவாகும்.

இனி, சர்மா அவர்கள், மொழிபெயர்ப்பைச் சிறப்பிப்பதில் எடுத்துள்ள முயற்சியைப் போலவே, அதன் பதிப்பைச் சிறப்பிப்பதிலும் அதிகக் கவலை செலுத்தியிருக்கின்றனர். புத்தக முழுதும் வெளியேறுமாறுல், நூற்பதிப்புமுறையிலும், இச்சங்கரபாஷ்யம் ஒரு முன்மாதிரியாக விளங்குமென்று தோற்றுகிறது. பாஷ்யத்தின்

வடமொழி மூலத்தை மிக வழகான கிரந்தாக்ஷரங்களில் முற்பட அமைத்து, அதன் தமிழ்மொழிபெயர்ப்பை அடியிற் காட்டிச்செல்கின்றார்கள். இம்முறை, வடமொழியைப் படிக்க விரும்புவோர்க்கும் பேருதவியாகும். காகிதமும், அச்சும் மிக மதிக்கத்தக்கவை. இம்முதற்சஞ்சிகை ராயல் எட்டுப்பக்கத்தில், ஏழுபார அளவுகொண்டுள்ளது. இந்நூல், இவ்வாறே 12-சஞ்சிகையில் முடிவுறுமென்றும், ரூபா, 15-விலையாவதென்றும் தெரிகின்றன. இப்புத்தகம் 'மானேஜர், கீதா ஆபீஸ், 33-அரமனைக்காரத்தெரு, சென்னை' யிற் கிடைக்கும்.

உரிச்சொனிகண்டு:—வெண்பாவால் அமைந்ததும், பழமையும் சுருக்கமும் உடையதுமான இந்நிகண்டு, இந்நாட்டில் முன்பு வெளியிடப்பட்டுள்ளதாயினும், சமீபத்தில், அதனைப் பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து வழூஉக்களைந்து யாழ்ப்பாணத்துச்சுன்னாகம்—ஸ்ரீமத்: அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். முன்பு வெளிவந்த பிரதியையும், இப்பிரதியையும் ஆங்காங்கு ஒப்புநோக்கி வருகையில், பிள்ளையவர்கள் முன்பதிப்பித்த நிகண்டை மீளவும் பதிப்பித்ததன் நோக்கம் நன்கு வெளியாகிறது. முன்னதாகிய பதிப்பில், ஒவ்வொருபொருளுக்கு உரியபெயர்கள் விடப்பட்டும், வேண்டாதவை சேர்க்கப்பட்டும், சொற்களினுருவம் பிறழ்ந்தும் பலவாறு மாறுபட்டனவெல்லாம், பிள்ளையவர்களது பதிப்பில் சோதிக்கப்பட்டுள்ளன. அவ்விரண்டு பதிப்புக்குமுள்ள வேற்றுமைகளும் இயல்புகளும் அவ்விரண்டையும் வைத்து ஒப்புநோக்குவோர்க்கு எளிதில் விளங்கத்தக்கன. பழைய நிகண்டொன்று, நீண்ட நாளாகப் பிழையற வெளியிடப்படாதிருந்த குறை, இப்போது, பிள்ளையவர்களால் நீக்கப்பட்டமை மகிழ்ச்சிதரத்தக்கதாம்.

காலப்பிரகாசிகை:—ஸ்மார்த்த முதலிய கர்மங்களின் காலங்களைப் பிரமாணபூர்வமாகத் தெளிவுறுத்தும் கிரந்தங்களில்; இந்நூல் இந்நாட்டில் மிகுதியும் கையாளப்படுவது. நம் நாட்டவரில் வடமொழிப்பயிற்சியில்லார், அடிக்கடி செய்யநேரும் கர்மங்களுக்குரிய காலவளவு தெரியவேண்டி, சம்ஸ்கிருதபண்டிதரை நாடிச்செல்வதும்

அப்பண்டிதர்கள் முக்கியமாக இக்காலப்பிரகாசிகையைப் பார்வையிட்டே விடைசொல்வதும் பலரும் பலமுறை அறிந்த விஷயங்களாம். இந்நூலை வடமொழியில் இயற்றியோர், ஸ்ரீ நரசிம்மாச்சாரியர் என்னும் ஒரு பிரபல பண்டிதர். இவ்வாறின்றியமையாத விஷயங்களைக்கொண்ட இந்நூல் சம்ஸ்கிருத பரிசயமில்லாத நம்மவரும் படித்துத்தெரிந்து கொள்ளும்படி, இப்போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. இம்மொழிபெயர்ப்பால், கர்மங்களின் காலவளவைகளைப் பிறருதவியின்றியே அறிந்து நடத்தக்கூடிய சௌகரியம் நம்மவர்க்குக்கைகூடுமென்பதில் ஐயமில்லை. இவ்வாறு உதவியாம்படி, இதனை மொழிபெயர்த்திட்டவர், திருவனந்தபுரம் சம்ஸ்கிருதகலாசாலை உதவிப்பண்டிதராகிய, மஹோபாத்யாயர் ப்ரஹ்மஸ்ரீ ஹரிஹரசாஸ்திரியாரவர்கள். பெரிதும் வேண்டற்பாலதாகிய இம்மொழிபெயர்ப்பு நூலானது, சாஸ்திரிகளது பேருதவியை அவ்வப்போது நினைப்பூட்டி நம்மவரை அதிக நன்றிபாராட்டச் செய்யுமென்பதில் ஐயமில்லை.

தியாகராஜஸ்வாமி சரித்திரம்:—சங்கீதஸாஹித்திய வித்வசிரேஷ்டராய், பரமபக்த சிரோமணியாய் விளங்கிய "தியாகையர்" என்றழைக்கப்பெறும் மஹானை அறியாதார் நம்நாட்டில் அதிகம் இரார். இவ்வளவு பிரபலராக அம்மகான் விளங்கினராயினும், அவரது திவ்வியசரிதங்களில், நம்மவரால் அறியப்பட்டவை சிலவேயாம். இக்குறை ஒருவாறு நீங்க, அச்சுவாமிகளது வைபவத்தைப்பற்றி, திருநெய்த்தானம் ஸ்ரீ நரசிம்மபாகவத சுவாமிகள் சிறுபுத்தகமொன்று வெளியிட்டுள்ளார்கள். தியாகையரவர்களைப்பற்றிய விசேஷங்கள் சில, இப்புத்தகத்தால் நன்குவெளியாகின்றன. நம் நாட்டில் அவதரித்த ஐயரவர்கள்பால் பக்திமிக்கார்க்கெல்லாம் இந்நூல், ஆனந்தத்தை விளைக்குமென்பது திண்ணம்.

பத்திராசிரியர்.

### இனிக் கலிக்குப் பொழிப்பெதுகையும் வருக்கப்பொழிப் பெதுகையும் வருமாறு.

"வலியது விரகுதீ கடியா றெனுமிவை, யீரேழ் தொட்டுப் பதினெட் டளவுங், கணவிரி பெருநாணு வுருமுத்தீ மழகளிறு, புலிசெல்வா யுரறு புலி பதினைந்து முதலாப், பத்தொன் பானள வுயரவு நரையுருமு, விரவு கொடி புலிவருவாய் பதினாறு முதலா, விருபதின் காறு முயரவும் வருதலிற், றுள்ள லோசை பெற்றபொழிப் பெதுகை, யறுபஃ தாக வறைந்தனர் புலவர்" கூ௰. "மூவகைப் பாவிற்கு மொழிந்த பொழிப்பெதுகை, நானூற் றொருபத்து மூன்றெண நவில்ப" சா௰௩.

### முற்றெதுகையும் வருக்கமுற்றெதுகையும் வருமாறு.

"நுந்தை வண்டு நான்கு தேமா, வைந்து முதலா வொரோவொன்று நான்கு, மின்னிரு நான்கா வொருநிலத்து வருதலு, மாக வகவல் பெற்ற முற்றெதுகை, யீராறு மொன்று மாகு மென்ப" ௰௩. இவற்றை யொரோ வொன்றாகக்கொள்ளின் மற்றை யடியொடு தளைவழுப்படும்; அது " மந்தி தந்த பைந்தாட் செந்தினை" எனநிற்ப மெல்லடி வந்தெனத் தொடை வந் தாற் றளைவழுவாமாறு காண்க. "வலியது விறகுதீக் கடியாறீ ராறும், கணவிரி பெருநாணு மழகளி றுருமுத்தீ, யுரறு புலிபதின் மூன்று நரையு ருமு, விரவு கொடிபதி னொன்கு முதலா, வொரோவொன் றேழாய் முற்றெ துகைபெறும்" "வருக்கமுற் றெதுகையு மவ்வா றேபெற், றொருநாற் பஃது மகவற் கெய்தும்" ஆக இருவகை முற்றும் ௱௫௰௩. 'ஞாயிறு போதுபூப் போரோ றென்றிவை, யெட்டு முதலா வொரோவென் றேழும், பாதிரி நன் ணுணுப் பூமருது மாசெல்வாய், மேவுசீ ரொன்பது முதலா வாறுங், காருரு மு மாவருவாய் பத்து முதலேந், துயரவும் புளிமா வொன்பது முதனான்கும், வரகெட்டு முதலா நான்கு மாகி, வந்த விவற்றின் வெள்ளை பெறுமுற், றெ ழுபத்து மூன்றே யாகு மிங்ஙனம், வருக்க முற்றும் வந்தவெண் ணகை, விர ண்டன் றொகைநூற் றுநாற்பத் தாறே, நிரையீ ராறுறழ்ந்த வடியறு பஃ திற், சுருங்கிய நிலத்தி லொரோவொன்று களையத், துள்ள லோசை பெற் றமுற்றுத்தொடைதா,நாற்பத் தெட்டே யாகும் வருக்க,முற்றுத் தொடை யு மவ்வா றாக, விரண்டன் றொகையுந்தெண்ணூற் றாறே." "மூவகைப் பாவி ற்கு மிருவகை முற்று, முந்நூற்றுத்தொண்ணூற் றைந்தென மொழிப" ௩௱௯௰௫. ஆக ௲௫௱௩௰௨.

### இனியொரூஉவெதுகை வருமாறு.

"நேர்பதின் மூன்று னகவற் கொரூஉவெதுகைந வண்டு நான்கு மின் னுத் தேமா, வைந்து ஞாயிறு போதுபூப் போரோ, றாறு பாதிரி மேவுசீர்

நன்ஞாணுப், பூமருது நீடுகொடி யேழு காருருமு, நாணுத்தளை யெட்டு முதலாவொரோவொன், றெவ்வே ழாக வியன்ற தொகைதா,மேழொரு பஃதோ டிருபத் தொன்றே.' கூ௰க. "நிரைபதின் மூன்று னகவற் கொரூஉவெதுகை, வரகிரு நான்கு புளிமா வொன்பான், வலியது கடியாறு விறகுதீப் பத்துக், கணவிரி யுரறுபுலி பெருநாணு வுருமுத்தீ, மழகளிறு பதினொன்று விரவுகொடி நரையுருமு, வீராறு முதலா வொரோவொன் றென்பா, னகத் தொகைநூற் றிருபத் தேழே" ஈ௰எ. ஆக உ௱அ. "நேர்பதின் மூன்றன் வெள்ளைக் கொரூஉவெதுகை, வண்டு ஞாயிறு போதுபூப் போரே, றெட்டு முதலா வேழுந் தேமா, மின்னுப் பாதிரி மேவுசீர் நன்ஞாணுப், பூமருது மாசெல் வாயிலை யொன்பான், முதலா வொரோவொன் றானுங் காருருமு, மாவருவாய் பத்து முதலா வொரோவொன், றைந்து யாக வறைந்த தொகைதா, மெண்ணொரு பஃதே யெய்து மென்ப.'

"நிரைபதின் மூன்றன் வெள்ளைக் கொரூஉவெதுகை, வரகு வலியது கடியாறு விறகுதீ, யெட்டுக் கணவிரி பெருநாணுவுருமுத்தீப், புலிசெல்வாய் மழகளிறு புளிமா வரவிலை, யொன்பது நரையுருமுப் புலிவருவாய் பத்து, முதலா வொரோவொன் றைந்து நிலம்பெற், றொரு பஃது மைந்து மாகும்." சூ௰ரு. "நேர் றாற் கலிக்கொரூஉ வெதுகை, பெருகிய நிலத்தி லொரோவொன்று களையப், பெறுந்தொடை நாற்பத் தெட்டுப்|பின்னர், நிரையீராறிற் சுருங்கிய நிலத்தி, லொரோவொன்று களையப் பெறுந்தொடை யஃதா, மிருவகைத் தொடையுந் தொண்ணூற் றாறே." கூசு.

"மூவகைப் பாவிற்கு மொழிந்த வொரூஉ வெதுகை, நானூற்று நாற்பத் தொன்ப தாகும்." சா௱சா௰கூ.

இனிவருக்கவொரூஉவருமாறு.

"வண்டைந்து மின்னுத் தேமா வாறு, ஞாயிறு போதுபூப்பேரோ றேழு, மேவுசீர் பூமருது நன்ஞாணு நீடுகொடி, யெட்டுக் காருருமு நாணுத்தளை யொன்பான், முதலா வந்தவை யொரோவொன் றானும்,பாதிரி யேழு முதலா வேழு, மாக வகவற்கு வருக்க வொரூஉத்தொகை, யேழொரு பஃது மொன்பது மாகும்." இனி நிரையாதி வருக்கவொரூஉவிற்கு முன்னர் நிரையாதி யொரூஉவிற்குக்கூறிய உரைச்சூத்திரத்தையேயிதற்குங்கொள்க. ஆக-௱கூ.

இனி வெள்ளைக்கு நேராதி வருக்கவொரூஉ நுந்தை யொழியமுன்னர் நேராதியொரூஉவிற்குக்கூறிய உரைச்சூத்திரத்தைக்கூறியதன்றொகையி லிதற்கேழுகுறைத்துக்கொள்க. ஆம். இனி வெள்ளைக்கு நிரையாதி வருக்க வொரூஉவிற்கு முன்னர் நிரையாதி யொரூஉவிற்குக் கூறிய வுரைச்

சூத்திரத்தைக்கூறியதன்றொகையே யிதற்குங் கொள்க. ௬௫. ஆக ௱௪௰௫. இனிக்கலிக்கு வருக்கமொரூஉவிற்கு முன்னமொரூஉவிற்குக் கூறியவுரைச் சூத்திரத்தையே கூறி யதன்றொகையேயிதற்குங் கொள்க. ௬௬. ஆக ௬௱௩௰௰.

"மூவகைப் பாவிற்கு மிருவகை யொரூஉத்தொகை, தொள்ளா யிரமே யாகு மென்ப." ஆக ௬௱. "அளவடிக்களவரும்விகற்பத்தொடைதா,நானூற் றுமுப்பத்துநான்கு தலையிட்ட, வீரா யிரமே யாகுமென்ப"ஆக ஓரடித்தொடை. உ௲௪௱௩௰௪. "இருவகைத்தொடையா னியன்ற தொகைதாம், பதின்மூவாயிரத்தறுநூற்றுத்தொண்ணூ, றீரடித் தொடையு மோரடித் தொடையும்" ௰௩௲௬௱௯௰. இனி, இச்சூத்திரத்திற்குத் 'தொண்டுதலையிட்ட பத்துக் குறை யெழுநூற்றொன்றுமென்ப' வென்று பாடமோதிப் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூறென்பாரு மினிப்பத்துக்குறை யெழுநூற்றொன்றுமென்ப வென்று பாடமோதித் தொண்டுதலையிட்ட பத்துப்பத்தொன்பதென்பாருமினித்தொண்டுதலையிட்ட பத்துக்குறை யெழுநூற்றொன்றுமென்ப வென்றுபாடமோதிப் *பதின்மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதென்பாரும் இனிப்பத்துக்குறைய யெழுநூற்றொன்பஃதென்ப வென்றுபாட மோதி யிதனைமிகவுநலிந்து பொருள்கொண்டு†பதின் மூவாயிரத் தெழுநூற்றெட்டென்பாருமெனப் பல பகுதியாசிரியர், இவற்றுணல்லதுய்த்துணர்ந்துகொள்க. இனிமெய்பெறுமரபிற்றொடையெனவே விளங்கத்தோன்றாதனவுஞ் சிலதொடையுளவாயிற்று. அவை ஆசிடை யெதுகை வேறுபாடு மிரண்டடி யெதுகையுஞ் செந்தொடை வேறுபாடு மிரட்டையுமந்தாதி வேறுபாடு மிணைகூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்றுக்கடையிணை கடைக்கூழை யிடைப்புணர்பின் என்பனவும் பிறவும் வேறுபாடாகக் கூறுவார் கூறுந்தொடைகளுமெல்லா மிதனானே தழீஇக்கொள்க. அவை மேற்கூறுதும். இனி, "அடிதொடை மிசைபல விரவின வரினு,முதல்வரு மதனது பெயர்கொளன் முறையே" எனச்சூத்திரஞ்செய்து பலரும் §முதல்

---

*௰௩௲௬௱௯௰௯ என்பர் உரையாசிரியர்.

†௰௩௲௭௱௮ என்பர் பேராசிரியர்; இவற்றை இந்நூல் ௬௧-ஆம் பக்கக்கீழ்க் குறிப்பிற் காண்க. இவ்வாறு நான் குரைப்பேதங் காட்டுதலால் நச்சினார்க்கினியர் இந்நூற்குரை செய்தற்கு முன்னமே நால்வர் இந்நூற் குரை செய்தனர் என்பது உய்த்துணரப்படும். யாப்பருங்கலவிருத்திகாரரும் ௰௩௲௬௱௯௰௯, என்பர். (உ௧) "செந்தொடை யிரட்டை."

§இதனைத், "தொடைபலதொடுப்பினுந் தளைபல விரவினு,முதல் வந்ததனான் மொழிந்திசிற் பெயரே" (௫௩) என்னும் யாப்பருங்கலச்சூத்திரவுரையிற்காண்க.

வந்த தொடையே தளையே முதலியனவே கொள்வர் பின்னுள்ளோர், அவரறியார். என்னை? "செங்காற் பைந்தினை யிதணமேறிப், பைங்காற் சிறுகிளி கடிவோட்டந்தை" யென்புழி எதுகையு முரணும் வந்துழி முதற்கண்ணதின்ன திறுதிக்கண்ணதின்னதென்று துணியலாகாமை கொள்க. இன்னுஞ் செய்யுட்செய்த சான்றோர் பலதொடையும் பலவிதகணமும் படவேண்டுமெனக் கருதிச் செய்தவற்றுட் சிலகளைந்தொன்றுகோடற்குக் காரணமின்மையு முணர்க. (ாக)

*ாஉ. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்.

இது கட்டளையடிக்கோர் புறனடை.

**இ-ள்;** அறுநூற்றிருபத்தைந்துள் ஒன்றைநிறுத்தி யதனோடறுநூற்று நான்கனையுங்கூட்டியு மதனோடு சீர்வகையடிகளையும் விகற்பத்தொடைகளையுங் கூட்டியுந் தொடுக்குந் தொடைப்பகுதிகளை விரிப்பினெண்ணிறந்து பலவாம் எ-று.

எனவே, இங்ஙனங் கூறாமல் வரையறைப்படுத்தி யிலக்கணங்கூறினார் என்றார். (ாஉ)

---

*எ-து எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்-ற்று. மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும். எ-று. அவையாவன, மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்பனவற்றின்கண் இணைகூழை முற்று மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் கடையிடை கடையிணை பின்கடைக்கூழை இடைப்புணர் என வேறுபடுத்துறழ்ந்து எழுத்தந்தாதி அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி எனவும் உயிர்மோனை உயிரெதுகை நெடில்மோனை நெடிலெதுகை வருக்கமோனை வருக்கவெதுகை இனமோனை இனவெதுகை எனவும் மூன்றாமெழுத்தொன்றெதுகை இடையிட்டெதுகை ஆசெதுகை எனவும் இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினன் எழுத்து வேறுபாட்டினானுறழவும் நிரனிறையாகிய பொருள் கோள்வகையானும் ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும் வரம்பிலவாகிவிரியும். அவற்றுட் சிலவருமாறு—இணையாவது முதலிருசீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது. கூழையாவது முந்துற்ற மூன்று சீரினும் வந்து இறுதிச்சீரின்வாராதது. உ-ம் "அணிமலரசோகின் றளிர்நிறங் கவற்றி" இது இணைமோனை. "பொன்னின்ன பொறிசுணங் கேந்தி" இது இணையெதுகை. "சீறடிப்பேரகலல்குலொல்குபு" இது இணைமுரண். தாஅட்டாஅமரை மலருழக்கி, இது இணையளபெடை. "மொய்த்துடன்றவழூமுகிலேபொழிலே" இது இணை யியைபு: எனவரும், இனிக்கூழை; "அகன்றவல்குலந்நுண் மருங்குல்" இது கூழை மோனை. "நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி" இது கூழையெதுகை. "சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்." இது கூழைமுரண்.

# ஒரு மரணம்.

நம் சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவராகவிருந்த ப்ராஹ்மஸ்ரீ பண்டித நடேசசாஸ்திரியவர்கள் இம்மாதம் சென்னையில் ஓர் அசம்பாவிதமான மரணத்துக்குள்ளான செய்தி, இந்நாடெங்கும் பெருந்துன்பத்தை விளைத்தது. இவர்கள், ஆங்கில பாஷையில் வல்லவராயிருந்ததோடு, சரித்திரவாராய்ச்சியிற் பேர்போனவராயும், நவீனகங்கள்(Novels) எழுதுவதில் அதிகத்திறமை பெற்றவராயும் விளங்கினார்கள். சாஸ்திரிகள் இதுவரை வெளியிட்ட நூல்களின் தொகுதியை நோக்கின், அவர்களது சலியாத உழைப்பின் சிறப்பு நன்கு விளங்கும். நம் செந்தமிழ்க்கு, சரித்திரத்துக்கு இன்றியமையாத பலபுது சாஸனங்களை அவர்கள் அனுப்பிவந்ததோடு "சுகசங்கர்ணசப்பிகை" என்ற சிறந்த நூலொன்றும் நம் பத்திரிகைக்கு எழுதிப்பெருமைப்படுத்தினார்கள். நம் நாட்டு அறிவாளிகளுள் ஒருவராயும் பெரும்பண்டிதராயும் விளங்கிய சாஸ்திரிகளது மரணச்செய்தி, மிகவும் பரிதாபகரமானது. சென்ற மாசத்தில் ஸ்ரீமத். கனகசபையவர்களை இழக்க நேர்ந்ததையொட்டி சாஸ்திரியாரது வியோகமும் இம்மாசம் நேர்ந்தது, இத்தமிழகத்தின் தௌர்ப்பாக்கியமேயாம்.

# T. R. Tawker & Sons,

## MOUNT ROAD, MADRAS,

வைரம், பர்ளை, கெப்பு முதலிய ரத்தினங்களும், நகைகளும், எங்களிடம் சரசமாய் விலைக்கு தரப்படும். தவிர நூதனமாய் வேண்டிய நகைகள் உத்திரவின்பேரில் செய்யப்படும். எங்களிடம் தயாராயிருக்கும் நகைகளுக்கு அற்புதமான காட்லாக்கு லெட்டரின் பேரில் அனுப்பப்படும். உயர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு வேலைத்திறமாயும் உத்திரவாதமாயும் செய்தனுப்பப்படும். ஒரு முறை பார்த்தால் அனுபோகம் தெரியவரும்.



B. 106 கெடியார கோலுசு சாவ்ரன் பொன்றல் செய்தது ரூ 165, 138, 118 வரையில். ஷ வெள்ளி ரூ 8.



B. 510. பொன் கைகெடியாரம் ஹண்டிங் முகிகால் மூடியுடையதும் (லீவர்) தக்கையில் [illegible] சரி யான காலங் காட்டுவதுமானது ரூ 140. ஷ வெள்ளிக் கெடியாரம் ரூ 25 முதல் 60-வரையில்.



B. 107 கெடியார கோலுசு சாவரன் பொன் ரூ 170. 8-மாத்துப் பொன் 145. 6-மாத்துப் பொன் ரூ 125. ஷ வெள்ளிக்கொலுசு ரூ 10.




J. 1053. காசிமாலை. பலவிதமான காதுகள்வைத்த காசிமாலை மாதிரிகள் எங்களிடம் தயாராயிருக்கிறது அதின் விலையும் மாதிரியும் தேவையானவர்களுக்கு மனுவின் பேரில் தெரிவிக்கப்படும். மாதிரி பிளானும் அனுப்பப்படும்.

# PREVENTION BETTER THAN CURE.

A person with a well fortfied system need have no fear of PLAGUE, SMALLPOX, CHOLERA or LUNG TROUBLES.

Disease always attacks the week and those whose run down systems can least resist it.

## SCOTT'S EMULSION

prevents illness, by building up and fortifying the weak places in your body, thus enabling you to positively throw off disease.

NOT TOUCHED BY HAND

*FOR SALE AT ALL CHEMISTS.*

SCOTT & BOWNE, LTD.,

MANUFACTURING

CHEMISTS,

LONDON, ENGLAND.



**Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!**